விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 076 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 21 வியாழக்கிழமை (05.03.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### இலங்கையின் தென் கடற்பரப்பில்

# ஈரானிய போர்க் கப்பல் அமெரிக்காவால் மூழ்கடிப்பு

- சுமார் 100 பேர் பலி
- 35 பேர் மீட்பு
- சுமார் 50 பேர் மாயம்



இலங்கையின் தென் கடற்பரப்பில் காலித் துறை முகத்திலிருந்து சுமார் 25 மைல் தொலைவில் ஈரானுக்குச் சொந்தமான போர்க்கப்பலை அமெரிக்கா மூழ்கடித்துள்ளது. இதில் சுமார் 100 பேர் மரணமடைந்ததோடு 35 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் சுமார் 50 பேர் மாயமாகியுள்ளனர். *(02ஆம் பக்கம் பார்க்க)*

## ஈரான் கப்பலிலிருந்து 35 பேர் மீட்பு



15ஆம் பக்கம் பார்க்க

### உதவி கோரியதால்

## ஈரானியர்களை காப்பாற்றினோம்

### இலங்கைக் கடற்படை




(கொழும்பு)

தாக்குதலுக்குள்ளான ஈரானிய கப்பலிலிருந்து 15ஆம் பக்கம் பார்க்க

### 2ஆம் உலகப் போருக்குப் பின்னர்

## இலங்கைக்கு அருகில் நடந்த மிகப்பெரிய தாக்குதல்

### காணொளி வெளியிட்ட அமெரிக்கா




(கொழும்பு)

இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் ஈரான் கப்பல் மீதான தாக்குதல் 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் இலங் 15ஆம் பக்கம் பார்க்க

## ஈரானிய போர்க்கப்பலை நீர்மூழ்கி மூலம் மூழ்கடித்தோம்

### அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர்



(வோஷிங்டன்)

இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் ஈரானிய போர்க் கப்பலை நீர்மூழ்கி மூலம் மூழ்கடித்தோம் என அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஹெக்ஸெத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித் 15ஆம் பக்கம் பார்க்க

### மத்திய கிழக்கில் போர்

## பொருளாதாரத் தாக்கம் குறித்து கலந்துரையாடல்



(கொழும்பு)

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தற்போதைய போர்ச் சூழல் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் அதை நிர்வகிக்க எடுக்கக் 15ஆம் பக்கம் பார்க்க

### மத்திய கிழக்கு மோதலில்

## இடைத்தரகராகவோ, இரையாகவோ இலங்கை ஒருபோதும் மாறக்கூடாது

### அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

இலங்கை போன்ற ஒரு நாடு எக்காரணம் கொண்டும் மத்திய கிழக்கில் இடம்பெறும் போரில் ஒரு இடைத்தரகராகவோ அல்லது இரையாகவோ மாறக் கூடாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். 02ஆம் பக்கம் பார்க்க

### மூன்றாம் உலகப் போர் மூளும்

## ரஷ்யா கடும் எச்சரிக்கை



(மொஸ்கோ)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்டு வரும் ஆட்சி மாற்ற நடவடிக்கைகள் காரணமாக மூன்றாம் உலகப் போர் மூளும் அபாயம் இருப்பதாக முன்னாள் ரஷ்ய ஜனாதிபதியும் பாதுகாப்புக் கவுன்சிலின் தற்போதைய 02ஆம் பக்கம் பார்க்க

## சுருவிலில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுருவில் பகுதியில் 9 கிலோ கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது 15ஆம் பக்கம் பார்க்க

### இலங்கையில் அமைந்துள்ள

## தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையில் அமைந்துள்ள தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைஎடுத்துள்ளனர்.

இந்தப்பாதுகாப்புவேலைத் திட்டத்தை மறுஅறிவித்தல் விடுக்கப்படும் வரை 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளைப் பதுக்கினால் உடனே அறிவிக்குக

## யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் எரிபொருள் விநியோக முறைகேடு மற்றும் சட்டவிரோத பதுக்கல் தொடர்பில் முறைப்பாடுகளை ஆதாரத்துடன் முன் வைக்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

119 அல்லது 021 222 2221 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தெரிவிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனம் தவிர்ந்து மேலதிக போத்தல்களில் மற்றும் எரிபொருள் கொள்கலன்களில் / தாங்கிகளில் எரிபொருள் நிரப்புவது தவிர்க்கப்பட வேண்டுமென யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 08 எரிபொருள் நிரப்பு நிலையங்களிற்கும் யாழ்ப்பாண்ப் பொலிஸாரால் எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் எங்காவது அவ்வாறு எரிபொருள் வழங்கப்படின் உடனே மேற்குறிப்பிட்ட இலக்கங்களிற்கு அறிவிக்கவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாரேனும் வாகனங் களில் எரிபொருளை நிரப்பிய பின் அதனை வேறு கொள்கலங்களிற்கு மாற்றிவிட்டு மீள எரிபொருள் பெற வந்தாலோ அல்லது வீடுகளில் பதுக்கி வைத்திருப்பது தெரிந்தாலோ உடனே மேற்படி இலக்கத்திற்கு அறிவிக்க வும்.

தமது முறைப்பாடுகள் ஆதாரத்தோடு வழங்கப்படும் போது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமது முறைப்பாடுகள் தொடர்பில் இரகசியம் பேணப்படும் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# ஓய்வூதியர்களுக்கான கண் மருத்துவ முகாம்

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கரவெட்டி கிளையின் ஏற்பாட்டில், ஓய்வூதியர்களுக்கான விசேட கண் பரிசோதனை மருத்துவ முகாமொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு, கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமிற்கு ஏற்கனவே பதிவு செய்து கொண்ட பயனாளிகள் அனைவரும் உரிய நேரத்தில் வருகை தந்து மருத்துவ ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கரவெட்டி பிரதேச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் தெரிவித்துள்ளது. (ம-7,60)


## அறிவித்தல்

### கிளை முகாமையாளர் பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பம் கோரல்

01. பெயர் : புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், 7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு
02. பதவி : கிளைமுகாமையாளர் (நிரந்தரம்)
03. சம்பளக் குறியீட்டு இலக்கம் : 208 / 13
04. சம்பள அளவுத்திட்டம் : 33360-520×10-580×10-740×10=51760.00
05. மேலதிக படிகள் : இத்துடன் சுற்றுநிருபத்திற்கமைவாக படிகள் அனைத்தும் வழங்கப்படும்.

### அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது.

(ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண த்ராதரப்பத்திர பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடான சித்தி.

வயதெல்லை 18-45 வயதுக்குள் இருப்பவராக இருத்தல் வேண்டும்.
கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வயதெல்லை பொருந்தாது. சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
விண்ணப்பதாரி குறித்த பதவிக்கு தேர்வு செய்யப்படும் போது சங்கத்தினால் கோரப்படும் பிணைப்பணத்தினை வைப்புச் செய்ய தயாராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து 2026.03.20ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், 7ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு"** என்னும் முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இத்திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தலைவர்,
புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து),
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.


## மூன்றாம் ...

துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வெடேவ் எச்சரித்துள்ளார்.

தொழில்நுட்ப ரீதியாக மூன்றாம் உலகப் போர் இன்னும் தொடங்கவில்லை என்றாலும், ட்ரம்பின் பைத்தியக்காரத்தனமான போக்கால் எந்த நேரத்திலும் அத்தகைய மோதல் வெடிக்கக்கூடும் என்று அவர் TASS செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறினார்.

ஈரானிய உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியின் படுகொலை ட்ரம்பின் தரப்பில் ஒரு "கடுமையான தவறு" என்றும், இது அனைத்து அமெரிக்கர்களின் உயிரையும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மெட்வெடேவின் கூற்றுப்படி, இந்த தாக்குதல் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளால் உலக ஆதிக்கத்தைத் தக்கவைக்க நடத்தப்படும் ஒரு பரந்த போரின் ஒரு பகுதியாகும்.

காமேனியின் மரணத்திற்குப் பிறகு அணு ஆயுதங்களை உருவாக்கும் ஈரான் அதன் முயற்சிகளை மூன்று மடங்காக அதிகரிக்கும் என்றும் அவர் கணித்தார்.

ரஷ்யாவும் இதேபோன்ற தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயத்தில் உள்ளதா என்று கேட்டதற்கு, ரஷ்யாவிற்கு எதிரான அத்தகைய நடவடிக்கைக்கு எதிரான ஒரே உத்தரவாதம்" அணுசக்திப் போரின் செலவுகள் குறித்த அமெரிக்காவின் பயம்" என்று மெட்வெடேவ் கூறினார்.

இருப்பினும், இந்த பின்னடைவிலிருந்து ஈரான் மீண்டுவரும் என்றும், அமெரிக்க நடவடிக்கை ஈரானிய சமூகத்தை மேலும் ஒன்றிணைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ம-7)

## இடைத்தரகராகவோ...

நேற்று முற்பகல் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் மோதல்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இரண்டாம் உலகப் போரின் பின்னர் இவ்வாறான போர் மோதல்களை நிறுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளன. நாங்கள் அந்த சர்வதேச நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ளோம்.

அந்த நிறுவனங்களுக்கும் தங்களது அதிகபட்ச பலத்தைப் பயன்படுத்தி இந்தப் போர் மோதல்களை நிறுத்துவதற்கான பொறுப்பு உள்ளது. புதிய தொழில்நுட்பம் மற்றும் இந்த அனைத்து விடயங்களுடனும் இது ஒரு புவியியல் எல்லைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது. அது எப்போது, எங்கு விரிவடையும் என்பதை எங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது. ஒரு நாடாக நாங்கள் தலையிடக் கூடிய எந்தவொரு வகையிலும் கோரிக்கையாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ தலையிட்டு இந்த மோதல்களை நிறுத்த நாங்கள் எதிர்பார்க்கிறோம்."

பெருமளவான இலங்கையர்கள் ஆபத்துக்குள்ளாகியுள்ளனர். உலகப் [illegible] அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. இதை யார் ஆரம்பித்திருந்தாலும் இது இப்போது எந்தளவுக்கு விரிவடைந்திருந்தாலும் இது விரைவில் முடிவடையும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

கேள்வி: ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்துவிட்டதாகத் தோன்றுகிறது. அமெரிக்காவைக் கண்டு பயமா? ஈரான் தூதுவரும் இலங்கையின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறு கோரியிருந்தார்....? மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகள் மாறிவிட்டனவா?

அமைச்சரின் பதில்: போர் ஒருபோதும் உலகிற்கு முன்னேற்றத்தைக் கொண்டுவரவில்லை. அரசியல் தேவைகளுக்கு மத்தியில் சாதாரண மக்களே பாதிக்கப்பட்டவர்களாக மாறினர். போரில் ஒரு பக்கத்தை ஆதரிக்க எவரும் முயற்சிக்கவில்லை.

அது மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அந்த நிலைப்பாடு உங்களுடைய நிலைப்பாட்டுடன் ஒத்துப் போகாமல் இருக்கலாம். அது அரசாங்கத்தின் பிரச்சினை அல்ல. ஒரு நாடாக நாங்கள் இருக்கிறோம். அதாவது எங்களைப் போன்ற ஒரு நாடு இந்தப் போரில் இடைத்தரகர்களாகவோ அல்லது போரின் இரையாகவோ மாறக்கூடாது. எனவே, இந்தப் போர் மோதல்களைத் தவிர்ப்பதற்காக எங்கள் தரப்பில் சொல்லாலும் செயலாலும் செய்யக்கூடிய அனைத்தையும் செய்து வருகிறோம் என்றார். (ம-7)

## ஈரானிய ...

கடந்த வாரம் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் International Fleet Review (IFR) 2026 மற்றும் மிலன் (MILAN) 2026 கடற்படை பயிற்சி ஆகிய இரு பெரும் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் 74 நாடுகளைச் சேர்ந்த 85 போர்க்கப்பல்கள் மற்றும் 50க்கும் மேற்பட்ட விமானங்கள் பங்கேற்றன.

இதில் இந்தியாவின் அழைப்பை ஏற்று ஈரானின் ஐ.ஆர்.ஐ.என்.எஸ் தேனா போர்க்கப்பலும் பங்கேற்றது.

கடற்படை பயிற்சியை முடித்துக் கொண்டு இந்தியாவில் இருந்து தேனா போர்கப்பல் ஈரான் திரும்பியது. இந்நிலையில் நேற்று அதிகாலை இலங்கை அருகே சென்றுக் கொண்டிருந்தபோது இந்தக் கப்பல்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. இலங்கைக் கடற்கரையிலிருந்து சுமார் 40 நாட்டிகல் மைல் தொலைவில், இந்தியப் பெருங்கடல் பகுதியில் இத்தாக்குதல் நடந்துள்ளது. தாக்குதலால் கப்பல் நீரில் மூழ்கியது. அதில் இருந்த சுமார் 180 பேரில் 100க்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

தாக்குதலைத் தொடர்ந்து இலங்கை கடற்படைக்கு ஈரானிய கப்பலில் இருந்து அபாய எச்சரிக்கை சமிஞ்ஞை கொடுக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து இலங்கை விமானப்படைக்குத் தகவல் கொடுக்கப்பட்டு விமானப்படை, கடற்படை இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதில் 35 பேர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும் மற்றவர்கள் சடலமாக கண்டெடுக்கப்பட்டதாகவும் காயமடைந்தவர்கள் தெற்கு துறைமுக நகரமான காலியில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இலங்கை கடற்படை செய்தித் தொடர்பாளர் கமாண்டர் புத்திக சம்பத் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தின் விலையில் திடீர் வீழ்ச்சி

(கொழும்பு)

உலக சந்தையில் தங்கத்தின் விலை குறைந்துள்ளதால், நாட்டிலும் தங்க விலை 13 ஆயிரம் ரூபாயால் குறைந்துள்ளதாக அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.


மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக தங்கத்தின் விலையில் திடீரென இவ்வாறு ஏற்ற இறக்கம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

நாட்டின் தற்போதைய நிலவரப்படி, நேற்று முன்தினம் ரூ.420,000ஆக இருந்த 24 கரட் தங்கத்தின் விலை நேற்று ரூ.407,000ஆக குறைந்துள்ளது.

மேலும், 388,500 ரூபாயாக இருந்த 22 கரட் தங்கத்தின் விலை 376,500ஆகக் குறைந்துள்ளது. (நி)

# ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டதால் இலங்கைக்குப் பாதிப்பில்லை

## மாற்று வழித்தடங்கள் பயன்படுத்தப்படுவதாக தெரிவிப்பு



(கொழும்பு)

**ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டால், அது இலங்கையின் எரிபொருள் இறக்குமதிக்கு நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தாது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டால், அது இலங்கையின் எரிபொருள் இறக்குமதிக்கு நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தாது .


இலங்கை தற்போது எரிபொருள் இறக்குமதிக்கு ஹார்முஸ் நீரிணையைப் பயன்படுத்துவதில்லை.

ஹார்முஸ் நீரிணைக்கு மாற்றாக, இலங்கை தற் போது ஆபிரிக்க நன்னம்பிக்கை முனை ஊடாகச் செல்லும் கடல் வழித்தடங்களையே எரிபொருள் இறக்குமதிக்குப் பயன்படுத்தி வருகிறது.

இந்த நீரிணை மூடப்படுவது உலகளாவிய எரிபொருள் உற்பத்தி மற்றும் போக்குவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றாலும், இலங் கைக்கு அது ஒரு பிரதான தடையாக அமையாது.

ஏற்கனவே மாற்று வழிகள் மூலமே எரிபொருள் கொண்டுவரப்படுவதால், இந்த நெருக்கடி நிலை இலங்கையைப் பாதிக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# ஐ.நா பிரதிநிதி - பேராயர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆன்ட்ரே பிரான்ச், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை நேற்று முன்தினம் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து இரு தரப்பினரும் நீண்டநேரம் ஆலோசித்தனர். குறிப்பாக, நாட்டில் நீதியை நிலைநாட்டுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால சவால்கள் குறித்துக் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இலங்கையில் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவது குறித்தும், அனைத்துச் சமூகங்களுக்குமிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

நீதிமிக்க முன்னேற்றப் பாதையை உருவாக்குவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை இருவரும் வலியுறுத்தினர்.

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் கல்வி மறுசீரமைப்பு செயல்முறைகள் குறித்து இச்சந்திப்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாட்டின் நீண்டகால தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிலைத்த வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் ஆராயப்பட்டது. (நி)

# இலங்கைக்கு வருகை பாப்பரசருக்கு அழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பரிசுத்தப் பாப்பரசர் 14ஆம் லியோ அவர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இத்தாலிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்க வத்திக்கானில் நாடுகளுடனான உறவுகளுக்கான துணைச் செயலாளர் மிஹைட்டா பிளாஜ் அருட்தந்தையை சந்தித்து இந்த உத்தியோகபூர்வ அழைப்பிதழைக் கையளித்தார். (நி)

# நாட்டை வந்தடைந்தது மாலைதீவு கப்பல்



(கொழும்பு)

மாலைதீவு கடற்படை கப்பலான 'HURAVEE' கடந்த 2 ஆம் திகதி நாட்டுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்காக வந்தடைந்ததுடன், மேலும் கொழும்புத் துறைமுகத்தில் பாரம்பரிய முறைப்படி இலங்கைக் கடற்படையினர் கப்பலை வரவேற்றனர்.

அதன்படி, கொழும்பு துறைமுகத்திற்கு வந்த Offshore patrol vessel வகை 'HURAVEE' என்ற கப்பலானது 48.9 மீற்றர் நீளம் கொண்டது மற்றும் குறித்த கப்பலின் கட்டளை அதிகாரியாக லெப்டினன்ட் கேணல் அஹமட் நபியு மொஹமட் செயற்படுகின்றார்.

மேலும், இந்தக் கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் போது, அதன் குழுவினர் கொழும்புப் பகுதியில் உள்ள கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களை பார்வையிட திட்டமிடப்பட்டுள்ளது. (நி)

# மத்திய கிழக்கில் பதற்றத்தால் சுற்றுலாத்துறைக்கு வருவாய் இழப்பு

(கொழும்பு)

மத்திய கிழக்கு வான்வெளி ஒரு வாரத்திற்கு மூடப்படுவதால் இலங்கைக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர் சுற்றுலா வருவாய் இழப்பு ஏற்படும், ஏனெனில் சுமார் 30 சதவீத வருகை அந்தப் பகுதி வழியாகவே நடைபெறுகிறது என்று இலங்கை சுற்றுலா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானை தாக்கியதைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் போர் நிலைமை அதிகரித்ததைத் தொடர்ந்து சுற்றுலாத் துறைக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை இலங்கை சுற்றுலா அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

கட்டார் ஏர்வேஸ், எமிரேட்ஸ், ஃப்ளைடுபாய் மற்றும் எதிஹாட் போன்ற விமான நிறுவனங்கள் இலங்கைக்கு கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வருகின்றனர்.

மேலும், மோதல் காரணமாக தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்ப முடியாமல் இலங்கையில் சுமார் 10,000 சுற்றுலாப் பயணிகள் சிக்கித் தவிப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

தற்போது நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் விசா செல்லுபடியை 14 நாட்கள் இலவசமாக நீட்டிக்க அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்(வாக்கிய பஞ்சாங்கம்)
## (06.03.2026-24.04.2028)




**பலனை எதிர்பாராமல் கடமையை மட்டும் செய்யும் துலாம் இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு சுக ஸ்தானத்திற்கும், பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கும் அதிபதியான சனி பகவான் உங்களின் இராசியில் உச்சம் பெறுகிறார். 06.03.2026 முதல் சத்ரு ஸ்தானத்தில் அமர்ந்து அட்டம ஸ்தானத்தையும், விரய ஸ்தானத்தையும் மூன்றாமிடத்தையும் பார்வை இடுவது உங்களின் இராசிக்கு நற்பலன்களை அள்ளித் தரும். கிடைக்க வேண்டிய சகல பலன்களையும் பெறுவீர்கள். எதிரிகளிடமிருந்து விடுதலை பெறுவீர்கள். சரியான நேரத்தில் காரியத்தை செய்து அதற்கு உரிய பலன்களைப் பெறுவீர்கள்.

உங்களின் இராசிக்கு யோகாதிபதியான சனி பகவான் சத்ரு ஸ்தானத்தில் அமர்ந்து ரண ருண சத்ருக்களை எதிர்க்கும் வல்லமையைப் பெறுவீர்கள். இதுவரை உங்களிடம் இருந்து கொண்டு மறைமுகமாக உங்களை எதிர்த்து செயற்பட்ட விடயங்களை அறிந்து கொள்வீரகள். அவரிடமிருந்து மீண்டு வெளியே வருவீரகள். நீண்டநாள் நோய் உங்களிடமிருந்து விடைபெற்று செல்லும். கடன் அடையும் விதமாக சில வழிகளில் உதவிகள் கிடைக்கப்பெற்று கடனிலிருந்து மீள்வீர்கள்.

இனி உங்களுக்கு உதவி செய்ய புதிய வழிகள் கிடைக்கும். நல்லவர்களின் தொடர்பு கிடைக்கப் பெறுவீர்கள். நீண்டநாள் நட்பு மீண்டும் தொடரும். சுமைகளை இறக்கி வைக்க வாய்ப்புக்கள் அமையும். கலைத்துறையினர் தங்களின் கலைப் பயணத்தை இனி சிறப்பாக செய்து முடிப்பார்கள். உடல் நலனில் சற்றுக் கவனம் செலுத்த வேண்டி வரும். எதைச் செய்தாலும் உங்களின் நல்ல எண்ணம் அதில் பிரதிபலிக்கும்படி செய்வீர்கள்.

உங்களின் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். ஒரு காரியத்தில் ஈடுபடும் முன் யோசித்து செயற்படுவீர்கள். யோசித்த பின்பு அதனை முழுமையாக முயற்சி செய்து வெற்றி பெறுவீர்கள். யாருக்கு எந்தத் துன்பமும் ஏற்படுத்தமாட்டீர்கள். குறுகிய கால தொழில்களில் முதலீடு செய்தால் நல்லபலனை பெற்று தரும். அரசியலிலும், பொது வாழ்விலும் சிலருக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்றாலும் எதையும் தக்க வைத்து கொள்ளும் பாக்கியம் உண்டாகும். சரியான் வழியில் சென்று வளம் பெற வேண்டுமென்ற எண்ணம் விரைவில் நிறைவேறும். யாருக்கு உதவி செய்தாலும் பிரதி பலன்களை எதிர்பார்க்க மாட்டீர்கள்.

**பரிகாரங்கள்:**

சனிக்கிழமை ராகு காலத்தில் (9 - 10.30) பைரவர் வழிபாடு செய்து 27 மிளகை கறுப்புத் துணியில் முடிந்து மூன்று நல்லெண்ணெய் தீபம் ஏற்றி தயிர், அன்னம் வைத்து வேண்டிக் கொள்ள உங்களின் சகல காரியமும் வெற்றியைத் தரும். சனி காயத்ரியை நாளாந்தம் 27 முறை சொல்லி வர நன்மை உண்டாகும்.




**மனவலிமையும், துணிச்சலும் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு முயற்சி ஸ்தானத்திற்கும், சுகஸ்தானத்திற்கும் அதிபதியான சனி பகவான் 06.03.2026 முதல் பஞ்சம ஸ்தானத்தில் அமர்ந்து களத்திர ஸ்தானத்தையும், லாப ஸ்தானத்தையும், தன ஸ்தானத்தையும் பார்வை இடுகிறார். இதுவரை அர்த்தாஷ்டம சனியாகவும், இராசியையும் பார்த்ததால் சொல்ல முடியாத பல கஷ்டங்களை நன்கு அனுபவித்து வந்தீர்கள். இனி அதிலிருந்து விடுதலையைபப் பெறுவீர்கள். குறுகிய கால முதலீடுகளால் கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். செய்யும் தொழிலைத் தெய்வமாக நினைத்து செயற்படுவீர்கள்.

உங்களின் இராசியில் உச்சம் பெறும் சனி பகவான் சத்ரு ஸ்தானத்தில் அமர்வது கடந்த கால செயற்பாடுகளில் இருக்கும் சிரமங்களிலிருந்து விடுபடுவீர்கள். சிலர் வீட்டுக்கடனை அடைக்க முடியாமல் கஷ்டப்பட்டு இருந்த நிலை மாறும். வருமானத்தை பெருக்கி கொள்ள வாய்ப்புகள் அமையும். எந்த நோக்கம் உங்களை இதுவரை பின்னைடவு அடையச் செய்ததோ இதிலிருந்து விடுதலை பெறுவீர்கள். கூட இருந்தே உங்களின் வளர்ச்சிக்கு தடையாக செயற்பட்டவர்கள் உங்களை விட்டுப் பிரி வார்கள். அடிக்கடி உடல் நலக்குறைவு வந்ததிலிருந்து விடுபடுவீர்கள். அரசியலிலும், பொது வாழ்விலும் நீங்கள் உங்களின் பதவிகளைத் தக்க வைத்து கொள்வீர்கள்.

உங்களின் உழைப்பிற்கு தகுந்த வருமானம் கிடைக்கும். தொழிலாளர்களின் உரிமைகளை பெற்று தருவதில் உங்களின் கொள்கைகளிலிருந்து மாறாமல் வாங்கித் தருவீர்கள். எதையும் போராடி பெற்றுத் தருவதில் மிகவும் உறுதியுடன் இருப்பீர்கள். சுமைகளை இறக்கி வைத்து வளம் பெறும் வழிகளை தேடி சென்று நற்பலன் பெறுவீரகள். விளையாட்டு வீரர்கள் சவாலர்ன பல போட்டிகளில் கலந்து கொண்டு திறமையை வெளிபடுத்தி பாராட்டு பெறுவீர்கள். சட்டம், ஒழுங்கு நிலை நாட்டும் பாதுகாப்பு பணியில் சிறப்பாக பணியாற்றி வெகுமதி பெறுவீர்கள். எதையும் பொருட்படுத்தாமல் நினைத்ததைச் சாதித்து காட்டுவீர்கள். புத்திரர்களின் வேலை வாய்ப்பு உறுதி செய்ய எடுக்கும் முயற்சி நன்மையை தரும். கணவன் மனைவி உறவு சற்று சலசலப்பாக இருந்தாலும் பெரிய பாதிப்பை தராது. அவ்வப்போது வந்து போகும் கருத்து வேறுபாடுகளுடன் இருந்தவர்கள் தங்களைப் புரிந்து கொண்டு செயற்படுவார்கள்.

செய்யும் தொழிலில் நல்ல வருமானம் பெற்று இருந்தாலும் அதனை வேறு முதலீடுகளில் முதலீடு செய்து மேலும் வருமானத்தைப் பெறுவீர்கள். ஆயுள் காப்பீடு, தொடர் வைப்பு என்று எடுக்கமுடியாத சேமிப்புகளை செய்வீர்கள். எதையும் யோசித்துச் செயற்படுவீர்கள். மற்றவரையும் வளம் பெற உதவிகளை செய்வீர்கள். உங்களின் பேச்சும், செயலும் தெளிவாக அமையும்.

**பரிகாரங்கள்:**

சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயர் வழிபாடுகள் செய்து வெண்ணெய் வாங்கி சாற்றி 108 வெற்றிலையில் மாலை கட்டிப் போட்டு ஶ்ரீராமஜெயம் சொல்லிவர உங்களின் சகல காரியமும் நினைத்தபடி சிறப்பாக அமையும். வேண்டியதை அடைவீர்கள்.




**தன்னம்பிக்கையுடன் எதையும் செய்து பலன் பெறும் தனுசு இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு தன ஸ்தானாதிபதியும், கீர்த்தி ஸ்தானாதிபதியுமான சனிபகவான் இராசிக்கு சுகஸ்தானத்தில் அர்த்தாஷ்ட சனியாக அமர்கின்றார். குரு பார்வை ஓராண்டுக்கு இருப்பதால் ஆரம்பத்தில் எந்த வித பாதிப்பையும் தரமாட்டார். சனி பார்வை சத்ரு ஸ்தானத்தையும், தொழில் ஸ்தானத்தையும், இராசியையும் பார்வை இடுகிறார். உடல் நலனில் அக்கறை எடுத்துக் கொள்ளல், நினைத்த நேரத்தில் வேலையை முடித்துக் கொள்ளல் போன்ற நிகழ்வுகள் நடக்கும். எதிலும் அவசரமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

உங்களின் இராசிக்கு சத்ரு ஸ்தானத்தை சனி பார்வை இடுவது இது வரை பல கடன் தொல்லைகளை அடைந்து வந்தீர்கள். நினைத்தபடி எதுவும் நடக்காமல் தடைப்பட்டு வந்த நிலையில் இனி அதிலிருந்து விடுதலை பெற்று கடன்கள் விரைவில் அடையும் வாய்ப்புகளை பெறுவீர்கள். சரியான குறிக்கோள் இல்லாத பயணம் எல்லைக்கு போகாது என்பது போல் எதை நோக்கி பயணம் செய்கின்றீர்கள் என்பதை முழுமையாக உணர்ந்து செயற்டுங்கள். அது உங்களுக்கு மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்று தரும். தொழில் ஸ்தானத்தை சனி பார்ப்பது உங்களுக்கு இது வரை எந்த தொழிலும் முடிவில்லாமல் இருந்து வந்தது. அதனை இனி நல்ல முடிவுக்கு கொண்டு வருவீர்கள்.

யாரையும் நம்பிக்கொண்டிருக்காமல் நீங்கள் முடிவு எடுத்தால் யாரின் எதிர்ப்பும் இல்லாத வகையில் காரியங்களை அமைத்து கொள்ளலாம். அறிவு ஆற்றல், விசுவாசம், பெருமை, கவலை துக்கத்திற்கு உரியவரான சனி பகவான் அதனை செயற்படுத்தும் போது உங்களுக்கு கடுமையான பாதிப்பை தர மாட்டார். உங்களின் அரசியல் செல்வாக்கு அரசியல்வாதிகளின் தொடர்புகள் நல்ல பலன் பெற்றுத் தரும். புதன் வீடு உங்களுக்கு தொழில் ஸ்தானமாக அமைவதால் ஆடை, கணினி சேவை, தொலைத் தொடர்புகள் சார்ந்த பணிகள் சிறப்பாக அமையும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிக் கொள்வீர்கள். இராசியைச் சனி பார்ப்பது உங்களின் உடல் நலனில் சற்று கவனம் செலுத்த வேண்டிவரும். சோதனைகள் யாவையும் சாதனைகளாக அடக்கிக் கொள்வீர்கள்.

வாகன விபத்துகள், வாகன பழுது அடிக்கடி வரும் என்பதால் வாகனங்களில் கவனமாக செல்வது நல்லது. வீடு சம்மந்தமான கடன் பெறுதல், கடன் பெற்று வீடு கட்டுதல் முதலிய பணிகளைச் செய்ய செயற்பட உதவிகள் இனி கிடைக்கும். கலைத்துறையினர் சில வசதிகளைப் பெறுவீர்கள். அதிக அலைச்சல் உண்டாகும். பயணம் தொடரும்.

**பரிகாரங்கள்:**

சனிக்கிழமைகளில் பைரவருக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி அரளிப்பூ மாலை, முந்திரிப் பருப்பு மாலை கட்டிப் போட்டு வெண் பூசணியில் தீபம் ஏற்றி வழிபாடு செய்து வர உங்களின் அனைத்து வேண்டுதலும் விரைவில் நடக்கும். கண் திருஷ்டி மறையும். பொருளாதாரம் சிறக்கும்.




**பிறருக்கு உதவி செய்வதில் அக்கறை எடுத்து கொள்ளும் மகர இராசி வாசகர்களே!**

உங்களின் இராசிக்கு இராசிநாதனும் தனஸ்தானாதிபதியுமான சனி பகவான் உங்களின் இராசிக்கு மூன்றாமிடத்தில் அமர்ந்து பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும், பாக்கிய ஸ்தானத்தையும், விரைய ஸ்தானத்தையும் பார்வை இடுவது தடைப்பட்டிருந்த காரியங்கள் இனி செயற்பட தொடங்கும். எதைச் செய்தால் நல்லதோ அதை செயற்படுத்துவதில் ஆர்வம் கொண்டு செயற்படுவீர்கள். குடும்பப் பிரச்சினைகள் முடிவுக்கு வரும். இதுவரை நடந்த ஏழரைச் சனி விடுதலை பெறு கிறார்.

இராசிநாதனாகிய சனி பகவான் இதுவரை குடும்ப சனியாக இருந்து வந்தமையால் குடும்பத்தில் பல்வேறு பிரச்சினைகள் வந்து நிம்மதியில்லாமல் இருந்து வந்தது. இனி அதிலிருந்து விடுதலை பெறுவீர்கள். மற்றவருக்கு உதவும் பண்பு இயற்கையாக உங்களுக்கு இருக்கும். நீங்கள் எதிர்பார்த்தபடி எல்லா காரியங்களும் சிறப்பாக அமையும். பொது விடயங்களில் நீங்கள் செயற்படும் விதம் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிக்கொடுக்கும். செய்யும் தொழிலில் வளர்ச்சியைப் பெறுவீர்கள். எந்த தொழிலாக இருந்தாலும் அதில் முதன்மை பெற வேண்டுமென்ற உங்களின் எண்ணம் விரைவில் நடக்கும். தொழிலாளர்களின் ஒற்றுமையை உறுதி செய்ய பாடுபடுவீர்கள். குறுகிய முதலீடுகளில் தொழில் செய்ய நல்ல லாபம் கிட்டும். அதிகமான நோக்கங்களைச் சிறிது காலம் கழித்து செய்வது நல்லது.

உங்களின் விடாமுயற்சிகளுக்கு எப்பொழுதும் நல்ல பலன் கிடைக்கப் பெறுவீர்கள். கல்வி அறிவு, கொண்ட கொள்கை மறுமலர்ச்சிகளில் முழுமையான நம்பிக்கை கொண்டு செயற்படுவீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் வரும். அதற்கு தகுந்த முதலீடுகளைத் தெரிவு செய்ய தாமதம் ஆகும். இதனால் சில காலம் தள்ளிபோகும். இருப்பினும் விரைவில் நடக்கும். குடும்பத் தகராறுகள் இனி முடிவுக்கு வரும். கருத்து வேறுபாடு நீங்கி, உங்களுடன் உறவுகள் இணைவார்கள். உங்களின் சாதுர்யமான பேச்சு மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்தும். கலைத்துறையினர் நீங்கள் எதிர்பார்த்த பணிகளை விரைவில் நடத்திக் காட்டுவீர்கள். முக்கிய பிரமுகர்களின் சந்திப்பு இனி நன்மையைத் தரும். வெளிநாடு சென்று வர முயற்சி எடுத்தால் அதற்கான பலன்கள் கிடைக்கும். ஏற்கனவே வெளி நாட்டில் இருப்பவர்களுக்கு முன்னணி நிறுவனத்தில் பணி செய்ய வாய்ப்பு அமையும்.

அரசியலில் விருப்பம் இல்லை என்றாலும் அதற்கான வாய்ப்பு தேடி வரும். உங்களின் பண்புகள் மற்றவருக்கு மிகவும் பிடிக்கும். எல்லோரிடமும் அனுசரித்து செல்வீர்கள். தன் கடமையைச் செய்வதில் எந்த குறுக்கிடும் இருக்கக்கூடாது என்று நினைப்பீர்கள். புதிய திட்டங்களை விரைவில் செயற்படுத்துவீர்கள். தாய் தந்தையரை கடைசி வரை காப்பாற்றுவீர்கள்.

**பரிகாரங்கள்:**

ஞாயிறுக்கிழமைகளில் ராகு காலத்தில் (4.30 - 06.00) பைரவருக்கு 7 விளக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி. தயிர் அன்னம், நைவேத்தியம் வைத்து வேண்டிக்கொள்ள உங்களின் வாழ்க்கை மிகச் சிறப்பாக அமையும்.(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாணவர்களுக்கு இந்திய அரசின் புலமைப்பரிசில்கள்

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கை மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில், இந்திய அரசாங்கம் 2026-2027 ஆம் கல்வி ஆண்டிற்காக முழுமையான நிதியுதவியுடனான புலமைப்பரிசில்களை அறிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

மருத்துவம், துணை மருத்துவம் மற்றும் சட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பாடத் துறைகளிலும் இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது.

அனைத்து மட்டங்களிலுமான கற்கைகளுக்காக பின்வரும் நான்கு பிரதான திட்டங்களின் கீழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நேரு நினைவு புலமைப் பரிசில் திட்டம் : பொறியியல், அறிவியல், வணிகம், பொருளாதாரம், கலை மற்றும் மானுடவியல் ஆகிய துறைகளில் இளங்கலை, முதுகலை மற்றும் கலாநிதி பட்டப்படிப்புகளுக்கு இது பொருந்தும்.

மௌலானா அசாத் புலமைப்பரிசில் திட்டம் : பொறியியல், அறிவியல் மற்றும் விவசாயத் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் முதுகலைப் பட்டப்படிப்புகள்.

ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் திட்டம் : தகவல் தொழில்நுட்பத் துறையில் இளங்கலை பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பட்டப்படிப்புகளுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் காமன்வெல்த் திட்டம்: பொறியியல், அறிவியல், வணிகம் உட்பட பல்வேறு துறைகளில் இளங்கலை, முதுகலை மற்றும் கலாநிதி பட்டப்படிப்புகளுக்குப் பொருந்தும்.


தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு முழுமையான கல்விக்கட்டணம் தள்ளுபடி செய்யப்படுவதுடன் மாதாந்த வாழ்வாதாரக் கொடுப்பனவு, புத்தகங்கள் மற்றும் எழுது கருவிகளுக்கான வருடாந்த கொடுப்பனவு, இந்தியாவுக்கான விமானப் பயணச் சீட்டு, கல்விச் சுற்றுலாக்களுக்கான விசேட நிதி உதவி, பல்கலைக்கழக வளாகத்தினுள்ளேயே தங்குமிட வசதி என்பனவும் வழங்கப்படும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் இலங்கை கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் திறமைச் சித்தி அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இது தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் தகுதி அளவுகோல்களை www.mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் விரைவில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவை (eduwing.colombo@mea.gov.in) அல்லது இலங்கை கல்வி அமைச்சைத் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி)

# நடப்பாண்டில் இதுவரை 13,416 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)



இலங்கையில் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 13,416 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர இது தொடர்பான விபரங்களை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டில் இதுவரை 13,416 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

டெங்கு பரவல் நாடு முழுவதும் காணப்பட்டாலும், கொழும்பு, கம்பஹா, காலி ஆகிய இடங்களில் அதிகமாக உள்ளது.

தற்போது நிலவும் வானிலை மற்றும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவான சூழலைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால், தாமதிக்காமல் தகுதியுள்ள மருத்துவரை அணுகிச் சிகிச்சை பெற வேண்டும்.

வீட்டைச் சூழவுள்ள பகுதிகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களை அகற்றி, நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதில் அக்கறை காட்ட வேண்டும் என மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (நி)

# மனித-வனவிலங்கு மோதல்களை கட்டுப்படுத்த விசேட திட்டம்

(கொழும்பு)

வனவிலங்குகளால் விவசாய நிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் மனித-வனவிலங்கு மோதல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் விரிவான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

யானைகள், காட்டுப் பன்றிகள், குரங்குகள், சிறுத்தைகள் மற்றும் மயில்கள் மனிதக் குடியிருப்புகளுக்குள் ஊடுருவுவதால் பாரிய சொத்து சேதங்கள் மற்றும் பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றன.

பல்கலைக்கழகங்கள், விவசாய அமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் ஆலோசனைகளுடன் விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சு இந்தத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய அமைச்சரின் தலைமையின் கீழ் விசேட அமைச்சரவைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு புதிய பரிந்துரைகளை முன்வைக்கும் எனத் தெரிவித்துள்ளார். (நி)

# விபத்து, அவசர சிகிச்சை முறைமைகளை வலுப்படுத்த புதிய திணைக்களம்

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் விபத்துகள் மற்றும் தீவிர நோய்த் தாக்கங்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கும் வசதிகளை மேம்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்காகச் சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் கீழ் 'விபத்து மற்றும் அவசர சிகிச்சை முறைமைக்கான பணிப்பாளர் அலுவலகம்' நிறுவப்படவுள்ளது.

இந்த அலுவலகம் மூலம் தற்போதுள்ள சிதறிய சேவைகளை ஒருங்கிணைத்து, தரமான வழிகாட்டல்கள் மற்றும் பிராந்திய ரீதியிலான அவசர சிகிச்சை மையங்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். (நி)

# எரிபொருள் விநியோகத்தில் தாமதமில்லை வலுசக்தி அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் அமைதியற்ற சூழலால் எரிபொருள் விநியோகத்துக்கு எவ்வித பாதிப்போ அல்லது தாமதமோ ஏற்படாது. எரிபொருள் விநியோக கட்டமைப்பு தொடர்பில் அச்சமூட்டி மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம் என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவர் மேலும் உரையாற்றியதாவது,

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் அமைதியற்ற நிலைமையை அரசாங்கம் என்ற ரீதியில் எம்மால் கட்டுப்படுத்த முடியாது. இருப்பினும் அதனால் ஏற்படும் பாதிப்புக்குள் மற்றும் நெருக்கடி நிலைமையை அரசாங்கம் என்ற ரீதியில் முகாமைத்துவம் செய்ய முடியும்.

எரிபொருள் விநியோகத்துக்கு எவ்வித பாதிப்போ அல்லது தாமதமோ ஏற்படாது. நாட்டில் தற்போது எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது. எரிபொருள் விநியோக கட்டமைப்பு தொடர்பில் அச்சமூட்டி மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெய் தொகையை சுத்திகரித்து அவற்றை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான வசதிகள் போதுமானதாக இல்லை. திருகோணமலை எண்ணெய் தாங்கிகளில் இலங்கைக்குச் சொந்தமான தாங்கிகள் முழுமையாக பயன்படுத்தப்படுகிறது. அப்பகுதியில் மேலதிகமாக இரண்டு எண்ணெய் தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்காமலிருந்திருந்தால் தேவைக்கு மேலதிகமான வகையில் எண்ணெய் தொகையை களஞ்சியப்படுத்தி வைக்க முடியும். ஆகவே விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கும் எதிர்க்கட்சியினர் கடந்த காலங்களை பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என அவர் தெரிவித்தார். (நி)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 13 . 09 . 1944 | 03 . 03 . 2026 |

## செல்லையா மகேஸ்வரி

சுண்டிக்குளி, பாண்டியன்தாழ்வை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரி அவர்கள் 03.03.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-தங்கமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், மகேந்திரன் மற்றும் சந்திரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுவேந்திரன் மற்றும், பாலகௌரி, பாலகிருஷ்ணன், பாமினி, பாலமுரளி, சுபாஜினி, சுதாஜினி, சுரேந்திரன், விஜயதர்ஜினி, சஞ்ஜீவன் (ஜீவன்), ஷாமந்திக்கா (மதுரா), சஜிந்திக்கா (மித்ரா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.03.2026 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் சகோதரர் சந்திரலிங்கத்தின் இல்லத்தில் (சுணக்கர் சந்தி அருகாமை, கொழும்புத்துறை) நடைபெற்று தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5119) தகவல் : மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச மருத்துவ முகாம்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் யாழ். கத்தோலிக்க முன்னணி மருத்துவர்கள் அமைப்பினால் மாபெரும் இலவச மருத்துவ முகாம் கடந்த 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப் பட்டது. இந்த இலவச மருத்துவ முகாமில் குருதியமுக்க பரி சோதனை, நீரிழிவுபரிசோதனை, போன்ற பல மருத்துவ பரி சோதனைகளும் இடம்பெற்றன.

பொது மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தும் வகை யில் யாழ் பல்கலைக் கழக மாணவர்களால் விழிப் புணர்வு நாடகமும் குறித்த மருத்துவ முகாமின் போது இடம் பெற்ற துடன் 500 இற்கும் அதிகமான நோயாளிகள் வருகை தந்து பயன்பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (8-60)

## புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் வரு டாந்த பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.

இதன்போது தலைவராக செ.குமாரசிங்கம், உபதலை வராக க.புஸ்பராசா, செயலா ளராக வே.இராசேந்திரம், பொருளாளராக திருமதி. செ.புஸ்பதேவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8)

### போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளமையால்

# குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டாம்

### மன்னார் மாவட்ட அரச அதிபர்

**(மன்னார்)**

**மன்னார் மாவட்டத்தில் போதிய அளவு எரி பொருட்கள் கையிருப்பில் உள்ளமையினால் விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை இடைத்தரகர்களிடம் குறைந்த விலைக்கு விற்க வேண்டாம் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



மன்னார் மாவட்டச் செய லகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,மன்னார் மாவட் டத்திற்கு தேவையான டீசல், பெட்ரோல் மற்றும் மண்ணெண் ணெய் ஆகியவை தற்போது போதிய அளவு கையிருப்பில் உள்ளன.

தற்போது நெல் அறுவடைக் காலம் என்பதால், அறுவடை இயந்திரங்களுக்கு தேவை யான எரிபொருளை தடை யின்றி வழங்குமாறு எரிபொருள் நிலைய உரிமையாளர்களு க்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி, அறுவடை இயந்திரங்களுக்கான கட் டணத்தை உயர்த்த வேண் டாம் என உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விவசாயிகள் இடைத்தர கர்களிடம் குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டாம் என்றும், உலர வைக்கும் இயந்திரங்களைப் பயன் படுத்தி நெல்லைப் பாதுகாக் குமாறும் அறிவுறுத்தப் படுகிறார்கள்.

தனியார் மற்றும் அரசு பேருந்துகளுக்குத் தேவை யான எரிபொருள் தாராளமாக வழங்கப்படுவதால், பொது மக்கள் எவ்வித இடையூறு மின்றி பயணங்களை மேற் கொள்ள முடியும்.

கடற்றொழிலுக்குத் தேவை யான மண்ணெண்ணெய் விநி யோகம் தடையின்றி நடை பெறுகிறது. மீனவர்கள் தங் களுக்கு அருகிலுள்ள நிலை யங்களில் எரிபொரு ளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஏதேனும் சிர மங்கள் அல்லது புகார்கள் இருந்தால், மாவட்டச் செயலகம் மற்றும் விவசாயிகள் கமநல அபிவிருத்தி உதவி ஆணை யாளர் அலுவலகத்திலும், மீனவர்கள் கடற்றொழில் உத விப் பணிப்பாளர் அலுவலகத் திலும் முறைப்பாடு தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (8-285)

## புத்தக அரங்கவிழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கியப் பேரவையினால் "நூறு மலர் கள் மலரட்டும்" என்ற தொனிப் பொருளில் தொடர்ச்சியாக முன் னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழா யா/வரணி மத்திய கல்லூரியில் நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய தினங்களும் இடம்பெற வுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்ப மாகவுள்ள இந் நிகழ்வில் மாலை 3 மணிக்கு ஈழத்து நூல்களின் அறிமுகமும் இலக் கியக் கலந்துரையாடலும் நிகழ் வில் எழுத்தாளரும் கலைஞரு மான வைரமுத்து திவ்விய ராஜனின் படைப்புலகம் என்ற தலைப்பில் அவரின் ஐந்து நூல்களின் அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வரணி மத்திய கல்லூரி யின் அதிபர் இரத்தினசிங்கம் கோகுலராகவன் தலை மையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுக உரை யினை ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் பொதுச் செய லாளர் இ.ம.அன்பரசன் வழ ங்கவுள்ளார். மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் "நேரகாலம்" மற்றும் "ஒரு கோப்பை தேனீர்" ஆகிய நாட கங்களும் இடம்பெறவுள் ளன.

மாபெரும் புத்தகக் கண் காட்சியும் மலிவு விற்பனையும் வெள்ளி, சனி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் இடம்பெறும். ஆர்வ லர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மக்கள் கலை இலக்கியப் பேரவை யினர் அழைப்புவிடுத்துள் ளனர். (8)

### கைதடி கூட்டுறவு எரிபொருள் நிலையத்திற்கு

# மண்ணெண்ணெய் தாங்கி அமைக்க நடவடிக்கை எடுங்கள்

### பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை

(சாவகச்சேரி)

கைதடி கூட்டுறவு எரி பொருள் நிரப்பு நிலையத்துக்கு மண்ணெண்ணெய் தாங்கி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை விடுத்து ள்ளது. இது தொடர்பாக அவர் கள் விடுத்துள்ள ஊடக அறிக் கையில்,

கைதடிச் சந்தியில் அமைந்துள்ள தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலைய மண்ணெண்ணெய் தாங்கி பலமுறை திருத்தம் செய்த போதும் அது பயன்ப டுத்த முடியாத நிலையில் உள் ளதாக பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர் தெரிவிக்கின்ற னர்.

பல ஆண்டுகளாக கைதடி கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண் ணையைப் பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலைமை நீடித்து வருகின்றது.

குறிப்பாக தென்மராட்சி மேற்கு பகுதி விவசாயிகள், மற்றும் கடற்றொழி லாளர்கள் மண்ணெண் ணெய் பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள் கின்றனர்.

எனவே இவ்விடயம் தொட ர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரி களை விரைந்து நடவடிக்கை



எடுக்குமாறு குறித்த அமைப்பு கோரிக்கை விடுத்துள் ளது. (8-30)

# டீசலைப் பதுக்கியவர்கள் ஏழாலையில் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் - ஏழாலை பகுதியில் டீசலை பதுக்கி வைத் திருந்த இருவர் நேற்று அதி காலை சுன்னாகம் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் டீசலை பதுக்கி வைத்திருப்ப தாக சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது. இதன்போது அவர்களிட மிருந்து 800 லீற்றர் டீசல், டீசலை பதுக்குவதற்கு பயன்ப டுத்தப்பட்ட வாகனம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கை களை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (8-104)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்றைய தினம் திருவள்ளுவர் குரு பூசை கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப் பட்டது.

(படம்-சிவசாந்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலி கடற்பரப்பில் விபத்திற்குள்ளான ஈரானிய கப்பல்

(கொழும்பு)

காலி கடற்பரப்பில் விபத்துக்குள்ளான ஈரானிய கப்பலில் இருந்த காயமடைந்த சுமார் 30 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக காலி தேசிய மருத்துவமனைக்கு அழைத்து வரப்படுவதாக அமைச்சர் விஜித ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

காலி கடற்கரையிலிருந்து சுமார் 40 கடல் மைல் தொலைவில் ஈரானிய கப்பலில் இருந்து உதவிக்கான அழைப்பு வந்ததை அடுத்து, இலங்கை கடற்படையால் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலயத்தின் ஆசிரியை,
திருமதி.
கார்த்திகா பிரமோகன்
அவர்கள் 22.02.2026 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 40 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பெற்றுக் கொண்டமையை வாழ்த்துவதுடன் பல பட்டங்கள் பெற்று, உயர் பதவிகளில் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.



Wish You All the Best

(C-5118)

வாழ்த்துவோர் :
நலன்புரிக்கழகம்,
யா/கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்.



மணி விழா நாயகியை
சேவை நயந்து வாழ்த்துகின்றோம்



திருமதி. வாசுகி
மகேந்திரராசா

சேவை விபரம்

- யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஸ்ட வித்தியாலயம் 2009.11.12 - 2012.05.20
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 2012.05.21 - 2014.05.15
- யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம் 2014.05.16-2026.03.04

வாசுகி என்னும் நாமம்
வசந்தமே ஆகும் என்றும்
பேசிடும் வார்த்தை யாவும்
பெருகியே அறிவைச் சுட்டும்
வீசிடும் தென்றல் போல
மாணவர் உள்ளம் தொட்ட
ஆசுகள் நீக்கும் ஆசான்
ஓய்வு காலம் சிறக்க வாழி

Wish You All the Best

(6976)

வாழ்த்துவோர்– ஆசிரியர் நல்லுறவுக் கழகம்,
யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம்,
சுன்னாகம்.



34 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்.
இராசையா செல்வராசா
(இளைப்பாறிய ஆசிரியர்)



தோற்றம் - 18.06.1920 மறைவு - 17.02.1992

திதி- துதியை (05.03.2026)

அப்பா காலங்கள் போனாலும் உங்கள்
நினைவு மட்டும் நீங்கா நினைவுகளாய்
என்றும் எம் நெஞ்சில் நிலைக்கும்.
உங்கள் ஆத்மா இறைவன் அடியில்
இருக்க பிரார்த்திக்கின்றோம்.

(2108)

'சுபசதனம்'
சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

உங்கள் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(பேராசிரியர் மா.சின்னத்தம்பி)



யாழ் மாவட்ட இசைக்குழுக்கலைஞர் சங்கம் நடாத்தும்

மாபெரும் இசைத்திருவிழா

Carnival Music Festival

Jaffna District Music Group Artist Association

வலம்புரி Valampurii
அச்சு ஊடக அனுசரணை

Media Mathi
சமூக வலைத்தள இணைப்பு

CARNIVAL MUSIC FESTIVAL

SOORIYAN FM சூரியன் FM 103.6 103.4
ஊடக அனுசரணை

KM creations studio
ஒளிப்பதிவு அனுசரணை

காங்கேசன் துறை
உல்லாசக் கடற்கரை
பிரதேச சபை மைதானம்

முதற் தடவையாக
யாழ் முன்னணி இசைக்குழுக்கள் ஒரே மேடையில் சங்கமிக்கும் பிரம்மாண்ட தொடரிசை நிகழ்ச்சிகள்

Time
2 PM to 1 AM

MARCH 06
அருணா
சன்
S.G.சாந்தன்
நியூ ஆனந்

MARCH 07
யாழ் ராகம்ஸ்
சிம்பொனி
சுருதிலயா
சண்சுருதி

MARCH 08
பிரண்ட்ஸ்
யாழ் ரியூன்ஸ்
எஸ். என் மியூசிக்
சாரங்கா

ஒலி அமைப்பு
SMS SRI MURUGAN
MESIYA SOUND
MOHAN Sounds Jaffna

TICKET
பிரவேசம்
பெரியோர்:200/=
சிறுவர்:100/=

மேலதிக தகவல்களுக்கு
077 227 1142
077 205 1992
077 280 4865

DIAMOND SPONSOR
FineMart Stylish

DIAMOND SPONSOR
விஜிதா VIJITHA

SABARI

முத்துமாரி

வசந்தம் சுப்பமாக்கர்
VASANTHAM FOOD (PVT) LTD
No. 1, Kadduvan Mallakam Road, Masiyapiddi.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மத்திய கிழக்கு மோதல்களால் சீர்குலையும் உலக பொருளாதாரம்

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை




(வோஷிங்டன்)

மத்திய கிழக்கில் நடந்து வரும் இராணுவ மோதல்கள் உலகப் பொருளாதாரம் மற்றும் நிதிச் சந்தைகளில் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நடந்து வரும் மோதலினால் ஐ.எம்.எப் இதுவரை வர்த்தகம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் இடையூறுகளைக் கண்டறிந்துள்ளதாகவும், எரிசக்தி விலைகளில் கூர்மையான உயர்வையும் கண்டுள்ளதாகவும், உலகப் பொருளாதார சூழலில் அதிகரித்த ஏற்ற, இறக்கம் மற்றும் நிச்சயமற்ற தன்மையைக் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஒருபுறம் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் மறுபுறம் ஈரானுக்கும் இடையே தொடர்ச்சியான தாக்குதல்கள், அதேபோல் பல அரபு நாடுகள் மீதான ஈரானிய தாக்குதல்கள் உள்ளிட்ட விரிவாக்கம், உலகளாவிய எண்ணெய் இறக்குமதியில் சுமார் 20% மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவில் 20% கடந்து செல்லும் ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளது.

தொடர்ந்து எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளை உயர்த்தியுள்ளதுடன் கப்பல் போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை சீர்குலைத்துள்ளதாகவும் ஐ.எம்.எப் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

## ஏற்றுமதிக்குத் தடை விதித்தது ஈரான்



(டெஹ்ரான்)

ஈரான் மற்றும் இஸ்ரேல் - அமெரிக்கா இடையே போர் தீவிரமடைந்து வரும் நிலையில், ஈரான் அரசு தனது நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசியத் தேவைகளைக் கருத்தில் கொண்டு அனைத்து வகையான உணவு மற்றும் விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிக்கு அதிரடியாகத் தடைவிதித்துள்ளது.

இது குறித்து ஈரானின் தஸ்னிம் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மறு உத்தரவு வரும் வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரானிய மக்கள் அனைவருக்கும் தடையின்றி அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து, போர்ச் சூழலைச் சமாளிக்க ஈரான் இத்தகைய அவசரகால நடவடிக்கைகளை நடைமுறைபடுத்தி வருகிறது. (நி)

## தாக்குதலுக்கு ஒத்துழைக்காததால்

### ஸ்பெயினுடனான உறவை முறித்துக் கொண்ட ட்ரம்ப்


(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவத் தளங்களைப் பயன்படுத்த ஸ்பெயின் அனுமதிதர மறுத்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டுடனான அனைத்து வர்த்தக உறவுகளையும் துண்டிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஈரான் மீதான தாக்குதல்கள் தொடர்பான இராணுவ நடவடிக்கைகளுக்கு ஸ்பெயினில் உள்ள தளங்களைப் பயன்படுத்த அந்த நாடு அனுமதி வழங்கவில்லை.

ஜேர்மனி ஜனாதிபதி பிரெட்ரிக் மெர்ஸ் உடனான சந்திப்பின் போது செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "ஸ்பெயின் மிகவும் மோசமாக நடந்து கொண்டது என்று குற்றம் சுமத்தியுள்ளதுடன் இதே போன்ற முடிவுகளை எடுத்த பிரித்தானியாவையும் அவர் கண்டித்துள்ளார்.


ஸ்பெயினுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்றும், அனைத்து வர்த்தக கொடுக்கல் வாங்கல்களையும் நிறுத்துமாறும் அமெரிக்க நிதிச் செயலாளர் ஸ்கொட் பெசென்ட்டுக்கு, ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். (நி)



## ஈரான் மீத

## மனித உரி

### ஐ.நா க




(நியூயோர்க்)
ஈரான்
இஸ்ரேல் மே
மனித உரிமை
கடும் கண்டன

போர் நிலைமைக்கு மத்தியில் ஈரானில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன விசாரணைக்குழு, அந்நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க மற்றும் இஸ்ரேலியத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஈரானுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன சர்வதேச உண்மை கண்டறியும் குழு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்தத் தாக்குதல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திற்கு முரணானது எனத் தெரிவித்துள்ளது.

## மாணவிகள் உள்ளிட்ட 16

## ஒரே இடத்தில் க

### புகைப்படத்தை வெ

(டெஹ்ரான்)

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பள்ளி மாணவிகள் உட்பட 165 பேருக்காக வரிசையாகத் தோண்டப்பட்டுள்ள கல்லறைகளின் புகைப்படத்தை ஈரான் அரசு வெளியிட்டுள்ளது.

ஈரானின் மினாப் நகரில் உள்ள மிகப்பெரிய இராணுவ தளத்தை குறிவைத்து, கடந்த 28ஆம் திகதி இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...தான தாக்குதல்
# ...ரிமை மீறல்கள்
## ...கடும் கண்டனம்

**...மீது அமெரிக்கா மற்றும் ...மேற்கொள்ளும் தாக்குதல் ...மை மீறல்கள் ஆகும் என ஐ.நா ...ம் வெளியிட்டுள்ளது.**

...இந்தத் தாக்குதல்கள்... எந்தவொரு ...ஷன் பிராந்திய ஒருமைப்பாடு அல்லது ...சியல் சுதந்திரத்திற்கு எதிராகப் பல ...ப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் ...ய நாடுகள் சபையின் சாசனத்திற்கு ...ணானவையாகும்" என அந்த அறிக்கை ...குறிப்பிடப்பட்டுள்ளது.

...வதேச சட்டங்களை மதித்துச் செயற்படுவது அனைத்துத் தரப்பினரதும் பொறுப்பு என இந்த விசாரணைக் குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத் தளங்கள் உள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில் அமெரிக்க படைத் தளங்கள் சேதங்களை சந்தித்துள்ளன. மேலும் அந்நாடுகளிலுள்ள அமெரிக்க தூதரகங்கள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், NATO உறுப்பு நாடான துருக்கி மீது பாலிஸ்டிக் ஏவுகணையை ஏவி ஈரான் தாக்குதல் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனால் ஈரானிய ஏவுகணை NATO படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக துருக்கி அரசு தெரிவித்துள்ளது. மேலும், எந்தவொரு விரோத நடவடிக்கைக்கும் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று துருக்கி எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

# ஈரானில் இதுவரை 1000 பேர் உயிரிழப்பு



(டெஹ்ரான்)

கடந்த 28ஆம் திகதி ஈரான் மீது இஸ்ரேலும், அமெரிக்காவும் இணைந்து தாக்குதலை ஆரம்பித்தன. இந்தத் தாக்குதலில் ஈரானில் சிறுவர்கள் உட்பட 1,000இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழுவின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் வரையான காலப்பகுதியில் 181 சிறுவர்கள் உட்பட குறைந்தது 1,097 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் 100 சிறுவர்கள் உட்பட 5 ஆயிரத்து 400இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளதுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தக் குழு தனது அறிக்கை முதற்கட்டமானது எனவும், மேலும் நூற்றுக்கணக்கான இறப்புகளைச் சரிபார்த்து வருவதாகவும் தெரிவித்துள்ளது. (நி)

# ...165 பேருக்கு ...கல்லறை
## ...வெளியிட்டது ஈரான்

...நடத்தின. இதில் இராணுவ தளம் ...அருகே உள்ள பள்ளியைச் சேர்ந்த ...மாணவிகள் உட்பட 165 பேர் ...உயிரிழந்தனர்.

ஈரான் வெளியுறவுத்துறை ...அமைச்சர் அப்பாஸ் அரக்சி தனது ..."எக்ஸ்" சமூக வலைதளத்தில் மக்களின் மனசாட்சியை உலுக்கும் ஒரு புகைப்படத்தைப் பகிர்ந்துள்ளார்.

அதில், திறந்தவெளி மைதானம் ஒன்றில் வரிசை வரிசையாக நூற்றுக்கணக்கான கல்லறைகள் தோண்டப்பட்டு, சுண்ணாம்புப் பொடியால் அடையாளமிடப்பட்டுள்ளன.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், "அமெரிக்க - இஸ்ரேல் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட மாணவிகள் உள்ளிட்டோருக்காக இந்தக் கல்லறைகள் தோண்டப்படுகின்றன. அவர்களின் உடல்கள் சிதறிப் போயுள்ளன. காசா முதல் மினாப் வரை அப்பாவி மக்கள் ஈவு இரக்க மின்றி படுகொலை செய்யப்படுகின்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தாக்குதலுக்கு உள்ளான பள்ளியில் மீட்புப் பணியாளர்கள் சிதைந்த கொங்கிறீட் இடிபாடுகளுக்கு இடையே தேடுதல் நடத்துவதும், அங்கிருந்து பள்ளிப் பைகள் மீட்கப்படுவதும் வீடியோக்களில் பதிவாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையில் இதுகுறித்து முறையிட்டுள்ள ஈரான், பொது மக்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல் இது என்றும், இதனை "போர்க்குற்றம்" மற்றும் "மனிதகுலத்துக்கு எதிரான குற்றம்" என்றும் சாடியுள்ளது. (நி)



# எண்ணெய்க் கப்பல்கள் அச்சுறுத்தப்பட்டால் உடனடியாக அமெரிக்கா தலையிடும்
## ட்ரம்ப் அதிரடி

(வோஷிங்டன்)

ஹார்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் சர்வதேச எண்ணெய் கப்பல்களுக்குத் தேவைப்பட்டால் அமெரிக்கக் கடற்படை நேரடிப் பாதுகாப்பை வழங்கும் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் போர்ச்சூழல் நிலவிவரும் நிலையில், எரிபொருள் விநியோகம் தடைபடாமல் இருக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், உலகளாவிய மசகு எண்ணெய் விலை யேற்றத்தைக் கட்டுப்படுத்தவும், வர்த்தகக் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அமெரிக்கா இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. கப்பல்கள் மீது ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால், அமெரிக்கப்படைகள் உடனடியாகத் தலையிடும் என ஓவல் அலுவலகத்திலிருந்து ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.



ஈரானுடனான அமெரிக்க - இஸ்ரேல் போர்; பாரசீக வளைகுடாவிற்கும், ஓமன் வளைகுடாவிற்கும் இடையில் செல்லும் கடல் பாதை வழியாகச் செல்லும் கப்பல் போக்குவரத்தை கிட்டத்தட்ட முற்றிலுமாக நிறுத்தியுள்ளது.

இது உலகளாவிய எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்திற்கான உலகின் மிக முக்கியமான பாதைகளில் ஒன்றாகும்.

ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 20 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் கடந்து செல்கிறது. வளைகுடா வழியாக அரசியல் ஆபத்து காப்பீடு மற்றும் அனைத்து கடல்சார் வர்த்தகத்திற்கும் உத்தரவாதங்களை வழங்க ஒரு கூட்டாட்சி நிறுவனத்திற்கும் அறிவுறுத்தியுள்ளதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நுண் நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்த

# உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### யாழ்.அரச அதிபர் பிரதீபன்

(சாவகச்சேரி) ———————————

**நுண் நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு உள்ளூராட்சி சபைகளுக்கும் இருப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்டச் செயலகத்தில் கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையோடு அண்மையில் இடம்பெற்ற ஊராட்சி முற்றக் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்ட குடிசார் அமைப்புக்களினுடைய சம்மேளன பிரதிநிதிகள் நுண்நிதி நிறுவனங்களால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தனர். அதாவது நுண் நிதி நிறுவனங்கள் அதிக வட்டி வீதம் அறவிடுவதாகவும், மாலை 6 மணிக்குப் பின்னரும் வீடுகளுக்கு சென்று தொல்லை கொடுப்பதாகவும் இதனால் பெண் தலைமைக் குடும்பங்கள் பெரிதும் பாதிப்படைவதாகவும் - தற்கொலை போன்ற விபரீத முடிவுகளை எடுக்க நுண் நிதி நிறுவனங்கள் காரணமாக அமைவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையில் கூட்டத்திற்கு



தலைமை வகித்திருந்த மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாறு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற நுண் நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்தும் பொறுப்பு உள்ளூராட்சி சபைகளுக்கும் இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர் கிராம அலுவலர்களுடைய உதவியுடன் - உள்ளூராட்சி மன்றங்கள் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியிருந்தார். (8-30)

# போதைப்பொருளை ஒழிக்க 1818இற்கு அழையுங்கள்!

(வவுனியா)

"முழு நாடும் ஒன்றாக" தேசிய வேலைத்திட்டம் கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் வவுனியா யங்ஸ் ஸ்ரார் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் போதைப்பொருளை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 1818 என்ற அவசர தொலைபேசி இலக்கமும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது தொலைபேசி இலக்கம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்களும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் முச்சக்கர வண்டிகளுக்கு ஒட்டி வைக்கப்பட்டன. (8-250)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பகிரங்க சேவை ஓய்வூதியங்களின் நம்பிக்கை நிதிய 16ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டி பகிரங்க சேவை ஓய்வூதியத்தின் நிதிய தலைவர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் திருமதி மணிவண்ணன் உமாமகள் கலந்துகொள்ளவுள்ளார். (8)



## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 250 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 220 | -- | 320 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 250 | 350 |
| தக்காளி | 100 | 100 | 100 | 150 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 150 | 200 | 100 |
| கோவா | 200 | 80 | 200 | 150 | 120 | 150 |
| கரட் | 250 | 350 | 400 | 350 | 350 | 320 |
| பூசணி | 100 | 120 | 150 | 150 | 100 | 80 |
| புடோல் | 100 | 150 | 100 | 150 | 150 | 130 |
| வாழைக்காய் | 150 | 160 | 200 | 200 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 150 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 180 | 200 | 150 | -- |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 300 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 300 | 400 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 400 | 400 | 200 |
| லீக்ஸ் | 100 | 250 | 300 | 300 | 300 | 270 |
| பீற்றூட் | 100 | 80 | 200 | 150 | 100 | 120 |
| கறிமிளகாய் | 600 | 300 | 400 | 250 | 250 | 400 |
| முருங்கைக்காய் | -- | 4000 | 2000 | 2800 | 2000 | -- |
| போஞ்சி | 300 | 300 | 400 | 300 | 250 | 330 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 250 | 200 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 80-140 | 150 | 100 | -- | 90 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 150 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 80 | 100-160 | -- | 120 |
| இராசவள்ளி | 300 | 550 | 400 | 350 | -- | 350 |
| வெங்காயப்பூ | 180 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 200 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | 120 | -- | 100 |

# இராசிபலன்

05.03.2026
மாசி 21, வியாழக்கிழமை
துதியை பிற்பகல் 5.56 மணிவரை

உத்தரம் முற்பகல் 9.03 மணிவரை
சுப நேரம் 7.56 - 9.26 மணிவரை
இராகுகாலம் 1.56 - 3.26 மணிவரை
சுபமுகூர்த்த நாள்

சந்திராஷ்டமம்:
சதயம்

**வளவன்**




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள், நிதி நிலை உயரம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், மாற்றங்களால் ஏற்றம் உண்டு, புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், மனச்சஞ்சலங்கள் சற்றுக்கூடும்.




போட்டியாக இருந்தவர்கள் மனம்மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலம் உண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள்.




குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வாக்குமேன்மையுண்டு.




தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு, குடும்ப மகிழ்ச்சிகூடும்.




மற்றவர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதம் ஆகலாம்.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.




பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கட்டடப் பணியை தொடரும் எண்ணம் உருவாகும், செய்தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.




சொந்த பந்தங்களின் வருகையுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இனிய வார்த்தைகள் இரும்புக் கதவையும் திறந்து விடும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 01 vii

## யாழ்.போதனா வைத்தியசாலை

புருசோத்தமன்



(நேற்றைய தொடர்ச்சி)

பொதுவில் அரச நிறுவனங்கள் உட்பட எந்த நிறுவனங்களிலும் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு அடிப்படையாக இருப்பது, அந்த நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் அனைவரும் சமமாக வேலை செய்யாமல் இருப்பதாகும்.

அதாவது ஊழியர்கள் சிலர் கடமை உணர்வோடு தமது பணியை சிறப்பாகச் செய்ய; இன்னும் சில ஊழியர்கள் தமக்கான கடமையைச் செய்யாமல் கையடக்கத் தொலைபேசிக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டோ அல்லது வேறு விதமாகவோ காலத்தைக் கடத்துகின்றனர்.

தவிர, யார் விசுவாசமாக வேலை செய்கிறார்களோ அவர்களிடமே எல்லா வேலைகளையும் நிர்வாகங்கள் ஒப்படைத்து விடுகின்ற நிலைமைகளும் உண்டு. உண்மையில் இஃது முகாமைத்துவத்திற்கு ஏற்றதன்று.

ஆம், சில ஊழியர்கள் விசுவாசமாக வேலை செய்யும் போது, ஏனையவர்கள் வேலை செய்யாமல் தட்டிக் கழிப்பவர்களாக இருந்தால், இஃது வேலை செய்கின்றவர்களை வேலை செய்யாமல் தடுக்கும் அல்லது வேலை செய்கின்றவர்களுக்கு மனக்கிலேசத்தை ஏற்படுத்தும்.

இந்த நிலைமையை யாழ். போதனா வைத்தியசாலையில் காண முடிகிறது.

ஆம், குறிப்பாக சிற்றூழியர் தரத்தில் இருக்கக் கூடிய பணியாளர்களில் ஒரு பகுதியினர் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டு தாம் எடுக்கின்ற வேதனத்திற்கு ஏற்ப மனச்சாட்சியாக வேலை செய்ய, இன்னும் சிலர் பொறுப்பற்றவர்களாக வேண்டா வெறுப்புடன் நடந்து கொள்கின்றனர்.

இத்தகையவர்களால் பொதுமக்கள் மிகுந்த மனச் சஞ்சலங்களை அனுபவிக்கின்றனர்.

இங்குதான் குறித்த பிரிவுகளுக்கு-பணியாளர்களுக்கு பொறுப்பாக இருக்கக்கூடிய பகுதித் தலைவர்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

எனினும் சற்றுச் சண்டித்தனமான ஊழியர்களின் வேண்டா வெறுப்புத்தனத்தை பகுதித் தலைவர்கள் கண்டுகொள்ளாமல் இருப்பதும் இளகிய பணியாளர்களிடம் துள்ளிக் குதிப்பதுமான நடைமுறைகளும் உண்டு.

ஆக, யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற அத்தனை பணியாளர்களும் தங்களின் பெயர்களையும் பதவிகளையும் தேவையாயின் அவர்களுக்கென வைத்தியசாலை நிர்வாகத்தால் வழங்கப்படக்கூடிய இலக்கங்களையும் உள்ளடக்கிய விபரங்கள் அவர்களின் சீருடைகளில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதனை நடைமுறைப்படுத்துகின்ற போது, குறித்த வைத்தியசாலை ஊழியர்கள் யாரேனும் நோயாளர்களுடன் சீறிச் சினந்து கொள்வார்களாயின், அவர்களை இனங்காண்பதும், அது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்துவதும் சுலபமாக இருக்கும்.

இதற்கும் மேலாக, சிறப்பாகப் பணியாற்றுகின்ற வைத்தியசாலை சிற்றூழியர்களின் பெருந்தன்மையை நிர்வாகத்திற்கு எடுத்துக் கூறுவதற்கும் அவர்களைப் பாராட்டுவதற்கும் இவ் அடையாளப்படுத்தல் அவசியமாகிறது.

எனவே இது விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

இது ஒருபுறமிருக்க, ஏதேனும் தேவைப்பாடு கருதி விடுதியில் இருந்து இன்னொரு அலுவலகத்திற்குச் செல்கின்ற சிற்றூழியர்களில் ஒரு பகுதியினர் அந்த அலுவலோடு நீண்ட நேரங்களைச் செலவிடுகின்ற நிலைமைகளும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருக்கவே செய்கிறது.

எனவே ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் குறித்த சிற்றூழியர் தனக்குரித்தான விடுதிக்கு வந்துவிட வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இறுக்கமான முறையில் அமுல்படுத்துவது அவசியம்.

### பொதுமக்களின் கருத்து நிலை

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நம் மரியாதைக்குரிய பணிப்பாளர், மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், இதர உத்தியோகத்தர்கள் எனப்பலர் உளர்.

நாம் மட்டுமல்ல பொதுமக்கள் மத்தியிலும் மிகவும் மரியாதைக்குரியவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளனர் என்பது மறுதலிக்க முடியாத உண்மை. இந்த உண்மைகளை ஏற்றுக் கொண்டே தரிசனத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது.

இந்த முன்வைப்புக்கள் யாரிலும் குறை காண்பதற்காகவோ அன்றி குற்றம் சாட்டுவதற்காகவோ அல்ல.

மாறாக, குறை குற்றம் களைந்து நிறைவான சேவைகளை எங்கள் யாழ். போதனா வைத்தியசாலை தர வேண் டும் என்பதுதான் தரிசன த்தின் நோக்கம் என்பதை திரிகரண சுத்தியோடு கூறிக் கொள்கின்றோம்.

ஆம், யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவக்கூடிய சில குறைபாடுகளை வைத்தியசாலை நிர்வாகம் அறிந்துள்ளது.

ஆனால், வைத்தியசாலை நிர்வாகம் அறியாத-அதே நேரம் பொதுமக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகின்ற விடயங்களும் உள்ளன. அவற்றை இங்கு முன்வைப்பதன் மூலம் ஒரு செம்மையான தீர்வைக் காண முடியும் என்ற நம்பிக்கையோடு நாம் அதை இங்கு தருகின்றோம்.

அந்த வகையில் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற போது அல்லது இடமாற்றம் பெறுகின்ற போது அல்லது ஒரு வைத்திய நிபுணர் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமை ஏற்று சில நாட்களில் அல்லது சில வாரங்களில் இங்கிருந்து வெளியேறும் போது, அது தொடர்பில் பொது மக்களின் கருத்துக்கள் எவ்வாறாக உள்ளன என்பதை உற்றுக் கவனிக்கும் போதுதான், அதற்கான பரிகாரத்தை நிர்வாகத்தால் காண முடியும் என்பதால் அது பற்றிப் பார்க்கலாம்.

**நாளை தொடரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






என் சிநேகிதனும் எண்ணிக் கொள்ள மாட்டான், ஆகையால் தயக்கமின்றிப் பாடு!" என்றார் கரிகாலர்.

"அப்படி யாராவது எண்ணிக் கொண்டால் மணிமேகலை அதற்காகக் கவலைப்படவும் மாட்டாள்!" என்றாள் நந்தினி.

"போங்கள், அக்கா! இரண்டு ஆண்கள் இருக்குமிடத்தில் இப்படிப் பரிகாசம் செய்யலாமா?" என்றாள் மணிமேகலை.

"இவர்கள் ஆண்கள் என்று நீ நினைப்பதுதான் பிசகு. ஒரு செத்த புலியின் தலையைக் கொண்டு வர முடியாதவர்களை ஆண் பிள்ளைகள் என்று சொல்ல முடியுமா? முற்காலத்தில் தமிழ் நாட்டு வீரர்கள் உயிருடன் புலியைப் பிடித்து அதன் வாயைப் பிளந்து பற்களைப் பிடுங்கிக் கொண்டு வந்து தங்கள் நாயகிகளுக்கு ஆபரணமாகச் சூட்டுவார்களாம்!

அந்தக் காலமெல்லாம் போய் விட்டது! போனால் போகட்டும்! நீ பாடு! அன்றைக்கு என்னிடம் பாடிக் காட்டினாயே? அந்த அழகான பாட்டைப் பாடு!" என்றாள் நந்தினி.

மணிமேகலை யாழ் வாசித்துக் கொண்டு பின்வரும் கீதத்தைப் பாடினாள். அது என்னமோ, இத்தனை நேரம் பாடியதைக் காட்டிலும் இந்தப் பாட்டில் அவள் குரல் இணையற்ற இனிமையுடன் அமுத வெள்ளத்தைப் பொழிந்தது:

"இனியபுனல் அருவி தவழ்
இன்பமலைச் சாரலிலே
கனிகுலவும் மரநிழலில்
கரம்பிடித்து உகந்ததெல்லாம்
கனவு தானோடி- சகியே
நினைவு தானோடி!
புன்னைமரச் சோலையிலே
பொன்னொளிரும் மாலையிலே
என்னைவரச் சொல்லி அவர்
கன்னல்மொழி பகர்ந்ததெல்லாம்
சொப்பனந் தானோடி- அந்த
அற்புதம் பொய்யோடி?
கட்டுக்காவல் தான்கடந்து
கள்ளரைப்போல் மெல்ல வந்து
மட்டிலாத காதலுடன்
கட்டி முத்தம் ஈந்ததெல்லாம்
நிகழ்ந்த துண்டோடி-நாங்கள்
மகிழ்ந்த துண்டோடி!"

இவ்வாறு மேலும் மேலும் பல கண்ணிகளை மணிமேகலை வெவ்வேறு பண்களில் அமைத்துப் பாடி வந்தாள். அந்தக் கான வெள்ளத்தில் மற்ற மூவரும் மூழ்கிப் போனார்கள்.

பல காரணங்களினால் நெஞ்சைக் கல்லினும் இரும்பினும் கடினமாக்கிக் கொண்டிருந்த நந்தினியின் கண்களிலும் கண்ணீர் ததும்பியது.

ஆதித்த கரிகாலர் இந்த உலகத்தை அடியோடு மறந்துவிட்டார். வந்தியத்தேவன் அடிக்கடி திடுக்கிட்டு விழித்துக் கொண்டவன் போல் மணிமேகலையை நோக்கினான்.

அப்போதெல்லாம் அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது கண்டு அந்த வீரனுடைய உள்ளம் மேலும் திடுக்கிட்டது. "ஐயோ! இந்தப் பெண்ணுக்கு நாம் என்ன தீங்கு செய்துவிட்டோம்?" என்று அவன் நெஞ்சம் பதைபதைத்தது.

கான வெள்ளத்திலும், உணர்ச்சி வெள்ளத்திலும் மூழ்கியிருந்தவர்கள் வரவரக் காற்று கடுமையாகிக் கொண்டு வருவதைக் கவனிக்கவில்லை.

ஏரியில் முதலில் சிறிய சிறிய அலைகள் கிளம்பி விழுந்ததையும் வரவர அவை பெரிதாகி வந்ததையும் கவனிக்கவில்லை.

(தொடரும்....)




## வலித்தால் வலிமை



பெரியவர்களுக்கு அதிக மதிப்புத் தரும் நாடு ஒன்று இருந்தது.

அந்நாட்டில் ஓர் ஊரில் நாற்பது வயதுடைய ஒருவர் இருந்தார். அவர் முன்கோபி. அவருக்கு ஒரே மகன் இருந்தான்.

அவர் தன் மகன் சிறு தவறு செய்தாலும் அவனைப் போட்டு அடி அடியென்று அடித்து வந்தார். மகன் வளர்ந்து பெரியவனாகி அவனுக்குத் திருமணமான பின்னரும் தம் நிலையை அவர் மாற்றிக்கொள்ளவில்லை.

ஒரு மாதத்திற்கு இரண்டு முறையாவது தவறாமல் மகனுக்குப் பூசை கிடைத்து வந்தது. தந்தை அடிக்கும் பொழுது சிறிதுகூட எதிர்ப்பைக் காட்டாமல் அவற்றை வாங்கிக் கொள்வான். அதற்காகச் சிறிதும் கண் கலங்க மாட்டான்.

இப்படியே பல ஆண்டுகள் சென்றன. ஒரு நாள் வழக்கம் போல் மகனை அடித்துவிட்டு ஓய்ந்தார் தந்தை.

ஆனால் மகனோ என்றும் போல் தாங்கிக் கொள்ளாமல் முதன் முறையாகத் தேம்பி தேம்பி அழத் தொடங்கினான்.

இதைக் கண்ட தந்தையாரின் மனம் இளகி விட்டது. "நன்றாக அடித்துவிட்டேனா? அதிகம் வலிக்கிறதா?" என்று அன்பாகக் கேட்டார்.

அதற்கு மகன், "இதற்கு முன்னர் நீங்கள் அடிக்கும் போதெல்லாம் எனக்கு வலிக்கும். என் தந்தையார் வலிமையோடு இருக்கிறார் என்ற மகிழ்ச்சியில் திளைப்பேன்.

ஆனால் இன்று நீங்கள் அடிக்கும் போது எனக்குச் சிறிதுகூட வலிக்கவில்லை. ஐயோ! என் தந்தையின் வலிமை குறைந்து விட்டதே! முதுமை அடைந்து விட்டாரே! இனி என்ன செய்வேன் என்று நினைத்தேன். என்னால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை" என்று சொல்லி விட்டுத் தேம்பினான்.

தன் மீது மகனுக்கு இருக்கும் அன்பை எண்ணி அவனை கட்டித் தழுவிக் கொண்டார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான எண்ணங்களை உற்பத்தி செய்யும் பொழுது வாழ்க்கையின் ஓட்டம் எளிதாக இருக்கும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எரிபொருளைப் பதுக்குவது அறத்துக்குரிய செயலன்று

ஈரான் மீது முதலாவது ஏவுகணைத் தாக்குதல் நடந்த கையோடு வட மாகாணத்தில் உள்ள எரிபொருள் நிலையங்களில் பெற்றோலுக்கான வரிசை களை கட்டியது.

எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை. போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது என அரசாங்கம் அறிவித்த போதிலும் எங்கள் வட மாகாணத்தில் இன்னமும் எரிபொருளுக்கான வரிசை நீண்டு செல்கிறது.

அதேவேளை வட மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் எரிபொருளுக்கு வரிசை இல்லை என்பதும் இங்கு குறித்துரைக்கப்பட வேண்டும்.

ஆம், 30 ஆண்டுகளுக்கு மேலாக யுத்த சூழலுக்குள் வாழ்ந்த தமிழ் மக்கள், அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையால் அடைந்த அவலம் சொல்லுந்தரமன்று.

பெற்றோல், மண்ணெண்ணெய், சவர்க்காரம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கம் தடைவிதித்ததன் காரணமாக நாம் பட்ட துன்பமே இப்போதும் களை கட்டுகின்ற எரிபொருள் வரிசைக்குக் காரணமாயிற்று.

ஆக, வடக்கில் எரிபொருளுக்காக நீள்கின்ற வரிசை என்பது; நாம் பட்ட நெடுந்துயரத்தின் பாற்பட்டது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் எரிபொருள் தாராளமாக உண்டென அரசாங்கம் அறிவித்தபோதிலும் அதையும் செவிமடுக்காமல், ஒரு குறிப்பிட்ட தரப்பினர் தொடர்ச்சியாக வரிசையில் நின்று எரிபொருளைக் கொள்வனவு செய்து அவற்றைப் பதுக்குகின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

உண்மையில் இத்தகையவர்களின் நோக்கம் எரிபொருளுக்கான கறுப்புச் சந்தையை ஏற்படுத்துவதாகும்.

இருந்தும் அரசாங்கம் எரிபொருள் விநியோகத்தை அதிலும் குறிப்பாக, பெற்றோலை வட மாகாணத்திலுள்ள அத்தனை எரிபொருள் நிலையங்களுக்கும் உடனுக்குடன் வழங்கிய வண்ணமுள்ளதால், கறுப்புச் சந்தை ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, எரிபொருளைப் பதுக்கி வைத்திருப்பது குற்றச் செயல் என்ற அரச அறிவிப்போடு; எரிபொருளைப் பதுக்கி வைத்திருந்த ஒரு சிலரைப் பொலிஸார் கைது செய்ததுடன் அவர்கள் பதுக்கி வைத்திருந்த எரிபொருளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

பதுக்கி வைக்கப்பட்டுள்ள எரிபொருளை மீட்பதற்கான தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டால், மத்திய கிழக்கில் இன்னும் ஆறு மாதத்துக்கு யுத்தம் நடந்தாலும் எங்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று கூறுமளவில், ஏகப்பட்ட எரிபொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எதுவாயினும் எரிபொருளைப் பதுக்கி வைப்பது அறம் அன்று. அறம் மீறிய அச்செயலால் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகம் என்பதால், எரிபொருளைப் பதுக்கி வைக்கின்ற மனநிலையில் இருந்து சம்பந்தப்பட்டவர்கள் மீள வேண்டும்.

# பிரித்தானியாவைச் சீண்டிய ஈரான் களமிறங்கும் றோயல் கடற்படை

## விஸ்தீரணமடையும் போர்க்களம்

(லண்டன்)

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரித்து வரும் மோதல்களுக்கு மத்தியில் சைப்ரஸ் தீவில் அமைந்துள்ள பிரிட்டிஷ் விமானப்படை தளத்தின் மீது ஈரான் ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதற்குப் பதிலடி தரும் வண்ணம் பிரித்தானியாவின் றோயல் கடற்படை தனது அதிநவீன போர்க் கப்பலை அப்பகுதிக்கு விரைவாக அனுப்பியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சைப்ரஸில் உள்ள பிரிட்டனின் "அக்ரோதிரி" விமானப்படைத் தளத்தை இலக்கு வைத்தே ஈரான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் தளத்தின் விமான ஓடுதளம் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஈரானின் இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும் பாதுகாப்பு பலப்படுத்தும் வகையிலும் பிரிட்டனின் அதிநவீன "HMS டங்கன்" போர்க் கப்பல் உடனடியாக சைப்ரஸ் தீவை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நிலைமையை மிக நெருக்கமாகக் கண்காணித்து வருவதாகவும் மேலதிக அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ம-7)

# முற்றுப்பெறாத எரிபொருள் வரிசைக்கு முற்றுப்புள்ளியிட மீண்டும் QR முறைமை

## யாழ்.மாவட்டச் செயலகம் தீவிர பரிசீலனை

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அதிகப்படியான எரிபொருள் விநியோகிக்கப்பட்ட போதிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசை குறைவின்றித் தொடரும் நிலையில் மீளவும் QR முறைமையினைக் கடைப்பிடிக்க திட்டமிட்டுவருவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

வட மாகாண அதிபர் சங்கத்தினருக்கும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தில் எரிபொருள் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் நீண்ட வரிசைகள் மற்றும் ஒழுங்கின்மை ஆகியவை பொது மக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் எரிபொருள் பெறுவதற்கு மூன்று அல்லது நான்கு மணித்தியாலங்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவல நிலை தொடர்வதாகவும் இதனால் அதிபர்கள், ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் சிறப்பாக நிறைவேற்ற முடியாமல் உள்ளதாகவும் வட மாகாண அதிபர் சங்கத்தினரால் எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன் எரிபொருள் விநியோகத்தைச் சீரமைத்து தேவைக்கேற்ப நியாய முறையில் பகிர்ந்தளிக்க QR நடைமுறையை மீண்டும் அமுல்படுத்துமாறும் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், QR நடைமுறையினைப் பின்பற்றுவது தொடர்பாக வலுசக்தி அமைச்சின் செயலாளருக்குத் தம்மால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் இன்றைய தினம் (நேற்று) பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 36 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பெற்றோல் விநியோகிக்க தாம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதன் மூலம் பொது மக்களின் வரிசை குறையும் என நம்புவதாகவும் தெரிவித்தார். (ம-7)

# பண்ணைக்குள் டீசல் பதுக்கிய நபர் கைது

## 1900 லீற்றர் டீசல் மீட்பு

சட்டவிரோதமான முறையில் டீசல் சேமித்து வைத்திருப்பதாக கிடைத்த இரகசியத் தகவலொன்றுக்கமைய கோமரங்கல்லப் பகுதியில் திறப்பனை பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பின் போது விலங்குப் பண்ணையொன்றில் சட்டவிரோதமாக சேமித்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 1900 லீற்றர் டீசல் அடங்கிய 10 பீப்பாய்களுடன் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கோமரங்கல்ல, கலேன் பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபரை கலன் பிந்துனுவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலன்பிந்துனுவெவப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# ஐஸ் போதைவஸ்துடன் துப்பாக்கிதாரி கைது

(திருகோணமலை)

திருகோணமலையில் வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், துப்பாக்கி மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் நேற்று (04) கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய் பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காகப் பயன்படும் துப்பாக்கி, ஆயிரத்து 450 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என ஆரம்பகட்ட விசாரணைகளின் வாயிலாகத் தெரியவந்துள்ள நிலையில் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர் வான் எல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

37

என். சொக்கன்

குறிப்பாக, அயல்நாட்டுத் தலைவர்களைக் கொலை செய்யும் சிஐஏவின் நடவடிக்கைகளால், அமெரிக்காவுக்குக் கடும் எதிர்ப்பு, கண்டனம் எழுந்தது.

இதனால், 1976ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜெரால்ட் ஃபோர்ட் (Gerald Ford) ஓர் அவசரச் சட்டம் கொண்டு வந்தார். இதன்படி, அமெரிக்க அரசு ஊழியர்கள், அமைப்புகள் யாரும் வெளிநாட்டுத் தலைவர்களைக் கொல்லும் முயற்சிகளில் பங்கேற்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது.

அதன்பிறகு, சர்ச் கமிட்டி விசாரணைகள் வந்தன. சிஐஏவின் நடவடிக்கைகளுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. 1981ஆம் ஆண்டு ஜனாதிபதி ரீகன் வெளியிட்ட இன்னொரு சட்டத்தின்படி, சிஐஏவின் அதிகார வரம்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டன.

அடுத்த இருபது வருடங்களுக்கு, சிஐஏ ஒரு பல் பிடுங்கப்பட்ட பாம்பைப் போலதான் செயற்பட்டுக் கொண்டிருந்தது. 2001இல் நிகழ்ந்த 9/11 சம்பவத்துக்குப் பிறகுதான், அவர்கள் பழைய வேகத்தில் மீண்டும் செயற்பட முடிந்தது.

இதனாலேயே, 9/11 சம்பவத்தைத் தொடர்ந்து சிஐஏமீது பல கேள்விக் குறிகள், சந்தேகக் கணைகள் எழுந்தன - இப்படி ஒரு தாக்குதல் நடக்கப்போவது சிஐஏவுக்கு முன்கூட்டியே தெரியுமா? தெரிந்தும் அந்தத் தகவலைச் சொல்லாமல் மறைத்துவிட்டார்களா?

இப்படி ஏதேனும் ஒரு பெரிய அதிர்ச்சிச் சம்பவம் நிகழ்ந்தால் தான், சிஐஏவின் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் திரும்பக் கிடைக்கும் என்பதற்காக, வேண்டுமென்றே 9/11 சம்பவத்தைப்பற்றி மூச்சுக் காட்டாமல் இருந்துவிட்டார்கள் என்று ஒரு தியரி இப்போதும் இருக்கிறது. இதற்கு எந்தவிதமான சாட்சியங்களும் இல்லாவிட்டால் கூட, இது உண்மையாக இருக்கக் கூடும் என்று நம்புகிறவர்கள் நிறைய.

காரணம், 9/11இற்குப்பிறகு அமெரிக்க அரசு எடுத்த அத்தனை நடவடிக்கைகளிலும், சிஐஏவின் கணிசமான பங்களிப்பு இருந்தது. குறிப்பாக, "தீவிர வாதத்துக்கு எதிரான போர்" எனும் அமெரிக்க அரசின் முழக்கத்தைதான், இத்தனை ஆண்டுகளாக சிஐஏ இரகசியமாகச் செய்துகொண்டிருந்தது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தினர் ஒஸாமா பின்லேடனையும் அவருடைய கூட்டாளிகளையும் தேடியது. பின்னர் ஈராக் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறது என்று குற்றம் சாட்டி அவர்கள் மீது படையெடுத்தது. சதாம் உசேன் தலைமையிலான ஈராக் அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. பின்னர் அவர் பிடிபட்டுத் தூக்கில் போடப்பட்டது...

கொஞ்சம் பின்னால் போய், இந்த அத்தியாயத்தின் முதல் பத்தியைப் படித்துப் பாருங்கள் - ஒருகாலத்தில், இதையெல்லாம் சிஐஏ செய்து கொண்டிருந்தது. இப்போது அமெரிக்காவே நேரடியாகச் செய்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம்.

ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு வரை, "உலகத் தீவிரவாதத்தை ஒழிப்போம்" என்பது சிஐஏவின் கொள்கை




முழக்கமாக மட்டும் இருந்தது. அப்படிச் செய்யாவிட்டால் என்ன நடக்கக்கூடும் என்கிற சாத்தியங்களை 9/11 சம்பவம் கண்ணுக்கு முன் நிகழ்த்திக் காட்டிவிட்டபிறகு, அமெரிக்காவுக்கு வேறு வழி தெரியவில்லை.

"அல் காய்தா எங்கே மறைந்து கொண்டாலும், அவர்களைத் தேடிப் பிடித்து முழுமையாக ஒழிப்போம். அவர்களுக்கு உதவுகிறவர்களுக்கும் இதே கதிதான்" என்று சூளுரைத்தது அமெரிக்கா. "அது மட்டுமில்லை, தீவிரவாதம் எங்கெல்லாம் முளைக்கிறதோ, அங்கெல்லாம் நாங்கள் தோன்றுவோம்" என்று கிருஷ்ண பரமாத்மா போல் அறிவித்தார்கள்.

இப்படி ஆவேசமாகச் சவால் விட்டபடி அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தான் கிளம்பிச் சென்றது. ஒஸாமா பின்லேடனை உயிரோடு அல்லது பிணமாகப் பிடித்துக் கொண்டு வருவதுதான் அவர்களுடைய ஒரே நோக்கமாக இருந்தது.

கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஆப்கானிஸ்தானில் இயங்கி வருகிறது சிஐஏ. ஆகவே, அவர்களுடைய உளவாளிகளின் உதவியுடன், அல் காய்தாவின் பயிற்சி முகாம்கள், ஒளிவிடங்களைத் தேடிப் பிடித்துச் சல்லடை போட ஆரம்பித்தார்கள்.

ஆனால், எப்போதாவது இந்தப் பக்கம் தலைகாட்டுகிற சிஐஏ பிரதிநிதிகளைக்காட்டிலும், ஆப்கான் நிலப்பரப்பு ஒஸாமா பின்லேடனுக்கு அத்துப்படியாகியிருந்தது. இதனால், அமெரிக்கப் படைகள் என்னதான் முயன்றாலும், அவரையோ, அவரது உள்வட்டத்தில் இருக்கும் முக்கிய அல் காய்தா பிரதி நிதிகளையோ பிடிக்கமுடியவில்லை.

கடைசியில், ஒஸாமாவைப் பிடிக்காமலே ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியது அமெரிக்கா. அதன் பிறகும், இன்றுவரை அவர் எங்கே இருக்கிறார் என்று சிஐஏவால் நிச்சயமாகக் கண்டு பிடித்துச் சொல்ல முடியவில்லை.

ஆனால் அதற்காக, தீவிர வாதத்தின் மீதான போரை நிறுத்தி விடமுடியுமா? அமெரிக்காவின் நீண்ட நாள் விரோதிகளில் இன்னொருவரான சதாம் உசேன் மீது பார்வையைத் திருப்பியது சிஐஏ.

அதன் பிறகு, அமெரிக்க ஜனாதிபதியின் பார்வைக்குச் செல்லும் சிஐஏவின் தினசரி PDB தகவல் குறிப்பில், ஈராக் பற்றிய தகவல்கள் அதிகம் இடம் பெறத் தொடங்கின. ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகத் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டது.

இது சிஐஏ உருவாக்கிய பிம்பமா, அல்லது அமெரிக்க ஆட்சியாளர்களே தாங்களாக உருவாக்கிக் கொண்டதா என்பதைச் சொல்வதற்கில்லை. ஆனால் இப்படிப் பிரித்துப் பார்க்கவே முடியாதபடி, இந்தக் காலகட்டத்தில், சிஐஏ ஒரு நிழல் அரசாங்கம்போல் அமெரிக்க அரசைக் கட்டுப்படுத்தத் தொடங்கி விட்டது தான் உண்மை.

அதன்பிறகு, அமெரிக்கா ஈராக்கினுள் நுழைந்தது. சிஐஏ குறிப்பிட்ட பேரழிவு ஆயுதங்கள் கிடைக்கவில்லை. ஆனால் சதாம் கிடைத்தார். அவருடைய பழைய வழக்குகள் நிறையவே கிடைத்தன. அப்பா புஷ் காலத்தில் தீராத ஒரு கணக்கை, மகன் தீர்த்துக்கொண்டுவிட்டார். "அடுத்து எங்கே?" என்பதுதான், இப்போது உலகின்முன் உள்ள கேள்வி.

சிஐஏ அந்த திசையில்தான் தனது தகவல்களைச் சேகரித்துக் கொண்டும் தொகுத்துக் கொண்டும் இருக்கும். அவர்களுடைய சமீபத்திய PDBக்களைக் கொஞ்சம் எட்டிப்பார்க்க முடிந்தால், இந்தக் கேள்விக்குச் சட்டென்று பதில் சொல்லிவிடலாம்.

9/11 தாக்குதல் நிகழ்ந்து ஆறு வருடங்கள் முடியப்போகிறது. இந்தக் காலகட்டத்தில், அமெரிக்காவின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் மீறி, உலகத் தீவிரவாதம் இன்னும் வலுவானதாகதான் வளர்ந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, இதே எதிர்ப்பு நடவடிக்கைகளால், அமெரிக்கா தனக்குப் பல புதிய விரோதிகளையும் சேர்த்துக்கொண்டிருக்கிறது. அவர்களை எதிர்க்கும் இயக்கங்கள் ஒவ்வொன்றும் உறுப்பினர் எண்ணிக்கையில் மட்டுமல்ல, தங்களது நெட்வேர்க் பலம், நவீன ஆயுதங்கள், பொருளாதாரப் பின்னணி என அனைத்திலும் மேம்பட்டிருக்கின்றன.

இதனால், அல் காய்தாவோ, அல்லது வேறொரு புதிய அமைப்போ, 9/11 போல் அமெரிக்காமீது இன்னொரு தாக்குதலை நடத்துவதற்கான வாய்ப்புகள், முன்பு எப்போதையும்விட அதிகமாக இருக்கிறது. ஆகவேதான், சிஐஏவின் சரித்திரத்தில் எப்போதும் இல்லாத அளவு அதிக எண்ணிக்கையிலான உளவாளிகள் உலகைச் சுற்றிவந்து கொண்டிருக்கிறார்கள். யாரும் எதற்காகவும் அமெரிக்கா மீது ஒரு சுட்டு விரல் நீட்டிவிடாத படி இவர்கள் பார்த்துக் கொள்கிறார்கள்.

அதேசமயம், கண்ணாடி பிம்பம் போல், இதன் பிரதிபலிப்பாகச் சத்தமில்லாமல் இன்னொரு மாற்றமும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. சிஐஏ உள்ளிட்ட உளவு அமைப்புகளின் பார்வையிலிருந்து எப்படித் தப்புவது என்பதற்கான புதுப்புது வழிகளை, தீவிரவாத இயக்கங்கள் முனைந்து கண்டறிந்தபடி இருக்கின்றன.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, தங்களுக்கு ஏன் இத்தனை எதிர்ப்பு கிளம்புகிறது என்பதைப்பற்றி அவர்கள் யோசிப்பதாக இல்லை. அந்தக் கேள்விக்கு பதில் தருவது சிஐஏவின் நோக்கமும் இல்லை. ஆனால் ஒன்று, சிஐஏ இல்லாமல், இனி அமெரிக்காவால் வாழமுடியாது. உலகைச் சுற்றித் தங்களின் உளவுக் கண்கள் எந்நேரமும் பார்த்தபடி இருக்கின்றன என்பது நிச்சயமாகத் தெரிந்தால்தான், அவர்களால் நிம்மதியாகத் தூங்கமுடியும்.

(முற்றும்....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஈரானியர்களை...

நேற்று அதிகாலை விடுத்த கோரிக்கைக்கு அமைய உடனடியாகச் செயற்பட்ட இலங்கைக் கடற்படையினர் 35 ஈரானியர்களைக் காப்பாற்றியதாக அறிவித்துள்ளனர்.

ஈரானியக் கப்பல் விபத்துத் தொடர்பில் இலங்கைக் கடற்படை நேற்று (04) நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இந்தச் சம்பவம் எங்கள் கடற்பரப்புக்கு வெளியே இடம்பெற்றிருந்தாலும் அது எங்கள் தேடுதல் மற்றும் மீட்பு (Search and Rescue) பிராந்தியத்திற்குள் வருகிறது. சர்வதேச பொறுப்புகளின் அடிப்படையில் முதற்கட்ட பதிலளிப்பாளர்களாக (First Responders) நாங்களே செயற்பட்டோம்," என அவர் குறிப்பிட்டார்.

கடலில் மிதந்த நிலையில் காணப்பட்ட சிலரை மீட்டு கரைக்கு கொண்டு வந்ததாகவும், பின்னர் விசாரணையில் அவர்கள் ஈரான் கப்பலைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்ததாகவும் தெரிவித்தார்.

"ஆரம்பத்தில் அவசர அழைப்பு (distress call) வந்த இடத்துக்கு கடற்படை சென்றபோது, கப்பல் எதுவும் காணப்படவில்லை. கடலில் எண்ணெய்க் கசிவுத் தடயங்கள் மட்டுமே தென்பட்டன. மீட்பு நடவடிக்கைகள் முடிந்த பின் தொழில்நுட்ப விசாரணைகள் மேற்கொள்ளப்படும்," எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## ஈரான் கப்பலி...

இலங்கையின் தெற்கு கடல் பகுதியில் அமெரிக்காவின் தாக்குதலுக்கு இலக்கான ஈரானியக் கப்பலிலிருந்து 35 பேர் மீட்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் காலியில் உள்ள கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக தேடுதல் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக இலங்கை விமானப்படை ஒரு விமானத்தை சம்பவம் நடந்த பகுதிக்கு அனுப்பியுள்ளது. (ம-7)

## சுருவிலில்...

செய்யப்பட்டுள்ளார்.

கடல் வழியாகக் கஞ்சாவைக் கடத்துவதாகக் கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஊர்காவற்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## பொருளாதாரத்...

கூடிய உடனடி நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று (04) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

எதிர்காலத்தில் அதிகரிக்கக் கூடிய நிலைமைகளைக் கணிப்பது சாத்தியமற்றது என்றாலும், அனைத்துத் துறைகளிலும் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளைத் தொடர்ந்து கண்காணித்து அந்த சவால்களை வெற்றி கொள்ள ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தற்போதைய எரிபொருள் கையிருப்பு போதுமானதாக இருந்தாலும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தேவையான கையிருப்புகளைப் பேணுவது மற்றும் அதனை நிர்வகித்தல், உலக சந்தையில் ஏற்படவிருக்கும் எரிபொருள் விலை ஏற்ற இறக்கங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், இந்த நிலைமைகளை நிர்வகிப்பது குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

எரிவாயு கையிருப்புகளைப் பேணுவதற்கு போதுமான களஞ்சிய வசதிகள் இல்லாததால் எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளைத் தேடுவது குறித்தும், அதற்காக பின்பற்றக்கூடிய குறுகிய கால மூலோபாயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சுயஸ் கால்வாய் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி போன்ற இடங்கள் மூடப்பட்டதால் கப்பல் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய இடையூறுகள் காரணமாக கொழும்புத் துறைமுகத்தில் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக, இலங்கையுடன் நீண்ட காலமாக இணைந்து பணியாற்றி வரும் கப்பல் நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (ம-7)

## இலங்கைக்கு...

கைக்கு அருகில் நடந்த மிகப்பெரிய தாக்குதல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அருகில் ஈரானிய போர்க்கப்பலான ஐரிஸ் தேனா மீது நடத்தப்பட்ட டார்பிடோ தாக்குதலின் காட்சிகளை அமெரிக்க இராணுவம் நேற்றிரவு வெளியிட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் ஒரு போர்க்கப்பல் மீது நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலாக இது விபரிக்கப்பட்டுள்ளது.

நேற்று இலங்கைக்கு அருகே கடற்பரப்பில் மூழ்கிய ஈரானியக் கப்பல் முன்னதாக விபத்துக்குள்ளானது என தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, குறித்த கப்பலில் இருந்த 35 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ம-7)

## ஈரானிய...

துள்ளார்.

இந்து சமுத்திரத்தில், "சர்வதேச கடற்பரப்பில் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்த ஈரானிய போர்க் கப்பல் ஒன்றை அமெரிக்கா மூழ்கடித்ததாகவும் மாறாக அது ஒரு டொர்பிடோ (torpedo) மூலம் மூழ்கடிக்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். தாக்குதலுக்குள்ளான ஈரானியக் கப்பலின் பெயரை ஹெக் [illegible] குறிப்பிடவில்லை. (ம-7)

## தூதரகங்களுக்...

தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் எழுந்துள்ள நெருக்கடியான நிலைமையைக் கருத்தில் கொண்டு, நாட்டின் பாதுகாப்பு மற்றும் அமைதியைப் பேணுவதற்கு இடையூறு விளைவிக்கும் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் பொலிஸ்மா அதிபரால் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள், அவற்றின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய இடங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தி விசேட பாதுகாப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 6123
G 3 6 4 4 0 2
அத சம்பத
G 4 4 0 2
சீட்டிழுப்பு இலக்கம் 0698

சுப தவசக்
திகதி 2026.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 0238
கடகம் 06 47 57
8536

தன நிதானய
திகதி - 2026.03.04
சீட்டிழுப்பு இலக்கம் - 2153
H 12 28 34 65 H

மெகா பவர்
திகதி 04/03/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2471
V 23 46 48 52 61

ஜய
திகதி 2026.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 0391
U 1 5 4 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4365
சீட்டிழுப்பு திகதி | 04.03.2026
Q 05 29 30 62
Q

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 1432
கும்பம் 02 20 41 59 கும்பம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.03.2026 வெற்றி வாரம் 0831
சுப்பிரி தன சம்பத
A 1 8 0 0 7 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,831,723.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3097
சீட்டிழுப்பு திகதி 2026.03.04 தினம் புதன்கிழமை
37 47 59 74 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 103,891,764.80

சனிதா
திகதி 04.03.2026 வெற்றி வாரம் 5258
19 47 52 57 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,606,882.80

சசிரி
வெற்றி வாரம் 927
சீட்டிழுப்பு திகதி 04.03.2026 புதன்கிழமை
20 22 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,148,800.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4809
சீட்டிழுப்பு திகதி 04.03.2026 தினம் புதன்கிழமை
24 27 54 59 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 21 08 11 24 31
2273
04.03.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.173,686,232.00

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன் கிழமை
வெற்றி வாரம் 2923
சீட்டிழுப்பு திகதி 2026.03.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.96,766,471.20
10 17 55 61 V


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூமி பாடசாலை மாணவர்களின் மாபெரும் கல்விக் கண்காட்சி

காலம் : 06.03.2026, 07.03.2026, 08.03.2026
இடம் : கோண்டாவில் சிவபூமி பாடசாலை
நேரம் : 8.30 A.M - 6.00 PM

அனைவரும் வருகை தந்து, மாணவர்களின் திறமைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நுழைவுச் சீட்டு : 50/=

சிவபூமி பாடசாலை
கோண்டாவில்.
(C-5125)

## NEC

பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்

# A/L 2028

கலை & வர்த்தகம்
ஆரம்பம்

காலம் - 07.03.2026 சனிக்கிழமை
நேரம் - காலை 9.00 மணி

தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

CONTACT FOR | 0765350999 | 0755350958
(C-5120)

## KBK - கொழும்புத்துறை

**A/L 2028 கணக்கீடு**

திரு.க.பா.பாலகஜன் SLTS
B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI), Dip.in.Edu(OUSL), M.com(Hons),Acc.spl

ஆரம்பம் :
08.03.2026 ஞாயிறு மாலை 4 மணி

A/L 2026, A/L 2027
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

| year | District |
|---|---|
| 2018,2022,2023 (kili) | 1st Rank |
| 2012,2013,2015,2019,2023(kili),2024 | 2nd Rank |
| 2016,2017,2021,2022,2023 | 3rd Rank |
| 2012,2015,2020 | 4th Rank |
| 2013,2015,2016,2017,2022,2023,2024 | 5th Rank |

Every year more than 55 students university Entrance
(C-5122)

## வடமராட்சி மண்ணில் 63 வருட நீண்ட கல்விச் சேவையில்...

# சதாபொன்ஸ் கல்வி நிலையம்

2028 ம் ஆண்டுக்கான வர்த்தகப்பிரிவு வகுப்புகள் ஆரம்பம்

07.03.2026 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு
அனுமதிகள் இன்று முதல்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும்.
நல்ல பெறுபேறுகளையும்,
மாணவர்களை தொகையாக பல்கலைக்கழகம் அனுப்பிய
வழமையான ஆசிரியர் குழாம் உள்ள ஒரே மையம்
என்றும் உங்கள் சேவையில்...
(C-5126)

யாழ்-பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, அல்வாய்.
077 309 5176, 076 126 0105
021 226 3206

## A/L 2028 Online Classes

| Physics | Chemistry |
|---|---|
| 076 54 630 54 | 077 30 122 88 |
| A.Jenukananth | A.Divulagananth |
| B.Sc.Eng (Hons) | B.Sc.Eng (Hons) |

University of Moratuwa

English & Tamil Medium | Starting on 06th March
(2121)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5123)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் கிளிநொச்சியில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
(6964)

076 889 1308
077 606 1333

## TECHNO WORLD
### தொழில் நுட்பக் கல்லூரி

TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

# A/L 2028

A/L தொழில்நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 07.03.2026 (சனிக்கிழமை)
நேரம் : காலை 8.30 மணி

A/L 2026, 2027 வகுப்புகள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு :
077 017 5346
(C-5124)


# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில்
உதவிப் பணிப்பாளர் - திட்டமிடல் ஆகக் கடமையாற்றி
04.03.2026 அன்று பணியிலிருந்து ஓய்வுபெற்று
இன்று மணிவிழாக் காணும்

## திருமதி வான்மதி கிருபாசுதன்

(இலங்கை திட்டமிடல் சேவை)
B.Com




### சேவை விபரங்கள்

| இல | பதவிகள் | காலப்பகுதி | சேவையாற்றிய நிலையம் |
|---|---|---|---|
| 01 | பட்டதாரி பயிலுநர் | 1990 – 1992 | சமூக சேவைத் திணைக்களம் – வட கிழக்கு மாகாண சபை |
| 02 | | | மாவட்டச் செயலகம் – யாழ்ப்பாணம் |
| 03 | | | பிரதேச செயலகம் – நல்லூர் |
| 04 | திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் | 1992 – 1994 | பிரதேச செயலகம் – பச்சிலைப்பள்ளி |
| 05 | | 1994 – 2001 | பிரதேச செயலகம் – வவுனியா |
| 06 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 2001 – 2010 | மாவட்டச் செயலகம் – வவுனியா |
| 07 | பதில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் | 2010 – 2020 | மாவட்டச் செயலகம் – வவுனியா |
| 08 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 2020 – 2023 | மாவட்டச் செயலகம் – முல்லைத்தீவு |
| 09 | பதில் திட்டமிடல் பணிப்பாளர் | 2023 – 2025 | மாவட்டச் செயலகம் – முல்லைத்தீவு |
| 10 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 2025 – 2026.03.04 | பிரதேச செயலகம் – ஒட்டுசுட்டான் |

கண்ணியமான அரச சேவையில்
திட்டமிடல் பணியில் சிறப்பாக
வேரூன்றிய விருட்சம்
ஊர் விரும்பும் உத்தமி
ஆற்றிய சேவைகள் ஆற்று வெள்ளம்!

அளவிடற்கரிய பணிச்சுமை இருப்பினும்
உதவித் திட்டமிடல் பணிப்பாளர் – எனும்
உயரிய சேவையின் உன்னதம் போற்றிய
உயர்ந்த சகோதரி!

சாந்த குணத்தினள் சிரித்த முகத்தினள்
சமத்துவம் பேணும் நல் குணக்குன்று
சேவையில் ஓய்வு நிலை காணும் தருணம்
நன்மைகள் விளையவும் நலம் பல பெருகவும்.
இன்பங்கள் கூடி இல்லம் சிறக்கவும்
ஆதவன் போல் மலர்ச்சி ஆயுள்வரை – நீளவும்
சக உத்தியோக நண்பர்கள்
மனதார வாழ்த்துகின்றோம்.

(6980)

வாழ்த்துவோர்: வட மாகாண இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர் சங்கம்


## மணப்பெண் தேவை

01. மிருசுவில், இந்து, 1992, ஆயிலியம், MSc in civil Engineering, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (37421)
02. சுன்னாகம், இந்து, 1996, மிருகசீரிடம், B.Engineering, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32933)
03. காரைநகர் - கொழும்பு, 1988, அனுசம், BSc, Analyst, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (37206)
04. இணுவில் - மட்டக்களப்பு, இந்து, 1988, சித்திரை, PHD, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (29262)
05. யாழ்ப்பாணம் - கொழும்பு, Roman catholic, 1975, MBA, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (24119)
06. உடுப்பிட்டி, இந்து, 1990, திருவோணம், HNDA, Manager, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52734)
07. பருத்தித்துறை, 1988, Roman catholic, IT Degree, Project Manager, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (49463)
08. கொழும்பு - யாழ்ப்பாணம், 1989, ஆயிலியம், Accountants Assistant, Italy Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (35651)
09. கரவெட்டி, இந்து, 1984, பூரம், Civil Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (56597)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
Unmarried, Divorce என்பன உண்டு.
(C-5127)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org